மிருகக்காட்சிசாலையில் 3-4 பாம்புகள் உள்ளன.

पुस्तकालये ____________ नवीनपुस्तकानि आगतानि।
நூல்நிலையத்தில் 7-8 புதுப்புத்தகங்கள் வந்தன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

प्रतिदिनं आमलकफलानि भक्षय।

தினமும் 1-2 நெல்லிக்கனிகளைச் சாப்பிடு.

सायं बालकैः सह उद्याने क्रीड।

மாலையில் 2-3 சிறுவர்களுடன் தோட்டத்தில் விளையாடு.

गुरुः बालकेभ्यः वेदं उपदिशति।

ஆசிரியர் 5-6 சிறுவர்களுக்கு வேதம் கற்பிக்கிறார்.

त्रिशिरःपुरे कलाशालाः सन्ति।

திருச்சியில் 7-8 கல்லூரிகள் உள்ளன.

तासु कलाशालासु बालिकाः एव पठन्ति।

அவற்றில் 2-3 கல்லூரிகளில் பெண்களே படிக்கிறார்கள்.

ஸம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கவும்.

துர்க்கையை ஒரு தடவை வலம் வா.

வினாயகரை மூன்று தடவை வலம் வா.

பழங்களை நான்காகக் கொண்டு வா.

மைதானத்தில் சிறுவர்கள் ஐந்து ஐந்தாக நிற்கின்றார்கள்.

द्वादशः पाठः — பாடம் 12

अव्ययानि — Indeclinables

नाम आख्यातं निपातः उपसर्गः என்று சொற்களை நான்கு வகைகளாக ஸம்ஸ்க்ருத இலக்கணம் வகுத்தது. அவற்றில் नाम (பெயர்ச் சொற்கள்) आख्यातं (வினைச் சொற்கள்) என்பவற்றைப் பற்றி இதுவரை கொஞ்சம் கற்றோம். அவை லிங்கம், விபக்தி, வசனம், காலம் முதலியவற்றால் வேறுபடுகின்றன. எனவே, அவைகளை மாறுபடுபவை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

व्ययங்கள் என்று சொல்லலாம். निपातः उपसर्गः என்பவை अव्ययங்கள் மாறாதவை. ஆங்கில. இலக்கணப்படி Prepositions, Adverbs, Conjunctions, Interjections என்பவை இவற்றில் அடங்கும். (பாடமாலா 1ல் பாடம் 10)

அவ்யயங்களில் சில முக்கியமான கிரியா விசேஷணங்கள் — வினை உரிச் சொற்கள் கீழே தரப்படுகின்றன.

अथ	பிறகு
अन्तः	உள்ளே
अधः, अधस्तात्	கீழே
अलं	போதும்
इव	போல்
ईषत्	கொஞ்சம்
एवं	இப்படி
कृतं	போதும்
किल	அல்லவா
खलु	அல்லவா
चिरं	நீண்ட நேரமாய், வெகு நாட்களாக
जातु	ஒரு சமயம்
प्राक्	முன்னால் (நேரத்தால்)
पुरः	முன்னால் (இடத்தால்)
पुरतः	முன்னால் (இடம்)
पुरस्तात्	முன்னால் (இடம்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

पश्चात्	பின்னால் (நேரம், இடம்)
बहिः	வெளியே
मिथः	ஒன்றுக்கொன்று
मा	வேண்டாம்
तूष्णीं	மௌனமாக
दिष्ट्या	நல்லவேளையாக
पुरा	முற்காலத்தில்
सद्यः	உடனே
ह्यः	நேற்று
श्वः	நாளை

आलयस्य पुरः / पुरतः / पुरस्तात् पुष्करिणी अस्ति।
கோயிலுக்கு முன்னால் திருக்குளம் உள்ளது.

अद्य सोमवारः।
இன்று திங்கட்கிழமை.

ह्यः भानुवारः।
நேற்று ஞாயிற்றுக்கிழமை.

श्वः भौमवारः।
நாளை செவ்வாய்க்கிழமை.

विद्यालयस्य पश्चात् नदी प्रवहति।
பள்ளிக்குப் பின்னால் ஆறு ஓடுகிறது.

अहं प्रतिदिनं प्रायः वेलातटं गच्छामि।
நான் தினமும் பெரும்பாலும் கடற்கரைக்குச் செல்கிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

त्वं सूर्योदयात् प्राक् शयनात् उत्तिष्ठ।

நீ சூர்யோதயத்திற்கு முன் படுக்கையைவிட்டு எழுந்திரு.

पुनः सायङ्काले मम गृहं मा आगच्छ।

மீண்டும் மாலையில் என் வீட்டிற்கு வராதே.

पुनः पुनः एवं निर्बन्धं मा कुरु।

மீண்டும் மீண்டும் இவ்வாறு நிர்ப்பந்தம் செய்யாதே.

अथ जातु दशरथः मृगयायै वनं आगच्छत्।

பிறகு ஒரு சமயம் தசரதர் வேட்டைக்குப் போனார்.

गर्भगृहस्य अन्तः देवमूर्तिः अस्ति।

கர்ப்பகிருஹத்துக்கு உள்ளே இறைவனின் உருவம் உள்ளது.

वृक्षस्य अधः / अधस्तात् छायायां पान्थाः उपविशन्ति।

மரத்தின் கீழே நிழலில் வழிப்போக்கர்கள் உட்காருகிறார்கள்.

अलं / कृतं भयेन। अहं युष्मान् रक्षामि।

பயம் போதும் (பயம் தேவையில்லை). நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்.

रामः वनं गच्छतु, भरतः राजा भवतु इति कैकेयी वरं अपृच्छत्।

ராமன் காட்டிற்குச் செல்லட்டும். பரதன் ராஜாவாக ஆகட்டும் என்று கைகேயி வரம் கேட்டாள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

सीतां अन्वेष्टुं रामलक्ष्मणौ चिरं वने अचरताम्।

ஸீதையைத் தேட ராமலக்ஷ்மணர்கள் நெடுநேரம் காட்டில் அலைந்தனர்.

पितुः कोपः ईषत् शान्तः आसीत्।

தந்தையின் கோபம் கொஞ்சம் குறைந்து இருந்தது.

अधुना मेघो न वर्षति। त्वं गृहं गच्छ।

இப்பொழுது மேகம் மழை பொழியவில்லை. நீ வீடு செல்.

नक्षत्राणि रत्नदीपाः इव विलसन्ति।

விண்மீன்கள் இரத்தின விளக்குகள்போல் விளங்குகின்றன.

ஸம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கவும்:

இன்று மாலை நான் வருகிறேன்.

இப்பொழுது நீ என்ன செய்கிறாய்?

தேங்காயின் உள்ளே இளநீர் இருக்கிறது.

கொஞ்சம் உரக்கப் படி.

இப்படிச் செய்யாதே.

அவர்கள் நெடுநேரமாக இங்கு நிற்கிறார்கள்.

பள்ளிக்கு முன்னால் மைதானம் இருக்கிறது.

மக்கள் கோயிலிலிருந்து வெளியே வருகிறார்கள்.

அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறார்கள்.

வகுப்பில் மௌனமாக இரு. பேசாதே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வண்டி மெல்ல வருகிறது.

நேற்றும் இன்றும் பள்ளிக்கு விடுமுறை.

வேலையை நன்றாகச் செய்.

மீண்டும் நாளைக்கு வா.

பரிகாசம் போதும்.

[नारिकेलोदकं - இளநீர்; मा संलप - பேசாதே; विरामः -விடுமுறை.]

போதும் (இனி வேண்டாம்) என்ற பொருளில் अलं कृतं என்று இரண்டு அவ்யயச் சொற்கள் தரப்பட்டுள்ளன. தவிர்க்கப்பட விரும்பும் பொருளைக் குறிப்பிடும் சொல்லை மூன்றாம் வேற்றுமையில் உபயோகப்படுத்த வேண்டும் என்பது இலக்கண விதி. कलहः निद्रा भयं என்ற பும்லிங்க, ஸ்திரீலிங்க நபும்ஸகலிங்கச் சொற்கள் अलं कृतं என்ற அவ்யயங்களுடன் சேரும்போது अलं कलहेन—अलं निद्रया—अलं भयेन என்ற மூன்றாம் வேற்றுமையில் உபயோகிக்கப் பெறும்.

अनुवादमाला — १६

तिसृभिः होराभिः एको यामः। दिवसस्य चत्वारः यामाः। निशायाः चत्वारः यामाः। आहत्य एकस्य दिनस्य अष्टौ यामाः। पञ्चदशभिः दिनैः एकः पक्षः। सः कृष्णपक्षः शुक्लपक्षः इति द्वेधा भवति। कृष्णपक्षस्य अन्तिमं दिनं अमावास्या। शुक्लपक्षस्य अन्तिमं दिनं पूर्णिमा। द्वाभ्यां पक्षाभ्यां एको मासः। द्वाभ्यां मासाभ्यां एकः ऋतुः। षड्भिः ऋतुभिः एकः सम्वत्सरः।

[होरा - மணி; यामः - யாமம்; दिवसः - பகல்; निशा

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

- இரவு; आहत्य - ஆகக்கூடி; दिनं - நாள்; अन्तिमं - கடைசி.]

अनुवादमाला — १७

अयं छात्रेषु प्रथमः। छात्राः द्वितीयायां तिथौ कलाशालां आगच्छन्ति। अर्जुनः पाण्डोः तृतीयः पुत्रः। चतुर्थ्यां तिथौ विनायकं पूजयन्ति। भ्रातृषु अहं पञ्चमः। मम द्वितीया भगिनी रुक्मिणी। अहं प्रातः दशम्यां होरायां तत्र आगच्छामि। कृष्णः अष्टम्यां तिथौ जातः। वसुदेवस्य पुत्रेषु अयं अष्टमः। सरस्वतीं कन्यामासस्य नवम्यां तिथौ पूजयन्ति। तस्य दशमी तिथिः विजयदशमी।

[छात्रः - மாணவன்; कन्यामासः - புரட்டாசி மாதம்.]

अनुवादमाला — १८

ராமன் ஒவ்வொரு நாளும் காலையில் இங்கு வருகிறான். இவன் மாணவர்களில் ஏழாவது. ஸஹதேவன் பாண்டுவின் ஐந்தாவது பிள்ளை. நான் வகுப்பில் ஒன்பதாமவன். பலராமன் வஸுதேவரது ஏழாவது பிள்ளை. கைகேயி தசரதரின் மூன்றாவது மனைவி. கிருஷ்ணனுக்கு எட்டு மனைவிகள். ராமனுக்கு ஸீதை ஒரே மனைவி

[प्रतिदिनं - ஒவ்வொரு நாளும்.]

अनुवादमाला — १९

வீட்டில் நாங்கள் ஏழு-எட்டு சகோதரர்கள் வசிக்கிறோம். என் வீட்டில் 4-5 பசுமாடுகள் உள்ளன. அவன் விநாயகரை நான்கு தடவை வணங்குகிறான். நான் தினமும் இரண்டு முறை கோவில் செல்கிறேன். மாணவர்கள் மும்மூவராக நிற்கின்றனர். மாணவிகள் நான்கு நான்காக நிற்கிறார்கள். தந்தை ஐந்தைந்தாக பழங்களைத் தருகிறார். நான் அடிக்கடி ஜலம் குடிக்கிறேன். அவன் தினமும் இரண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தடவை சாப்பிடுகிறான்.

त्रयोदशः पाठः — பாடம் 13

तुं त्वा என்ற விகுதிகள் சேர்ந்து வரும் அவ்யயங்கள்

கீழே உள்ள இரட்டை வாக்கியங்களைக் கவனிக்கவும்:

रामः पठति — रामः पाटालयं गच्छति।

कृष्णः क्रीडति — कृष्णः क्रीडाङ्गणं गच्छति।

पिता देवं पूजयति — पिता पुष्पाणि नयति।

अहं स्नामि — अहं नदीं गच्छामि।

त्वं सिनेमां पश्यसि — त्वं प्लासां गच्छसि।

முதல் வாக்கியங்களிலுள்ள पठति, क्रीडति, पूजयति, स्नामि, पश्यसि (படிக்கிறான், விளையாடுகிறான், வழிபடுகிறான், ஸ்னானம் செய்கிறேன், பார்க்கிறாய்) என்ற வினைப்பயன் கருதி இரண்டாவது வாக்கியங்களால் குறிப்பிடப்பட்ட செயல்கள் செய்யப்படுகின்றன. உதாரணம்: ராமன் படிப்பதற்காகப் பள்ளிக்குச் செல்கிறான். அப்போது இரு வாக்கியங்களும் ஒன்றாகி விடுகின்றன.

रामः पठितुं पाठशालां गच्छति।

ராமன் படிப்பதற்குப் பள்ளிக்குச் செல்கிறான்.

कृष्णः क्रीडितुं क्रीडाङ्गणं गच्छति।

கிருஷ்ணன் விளையாட மைதானம் செல்கிறான்.

पिता देवं पूजयितुं पुष्पाणि नयति।

தந்தை இறைவனை வழிபட புஷ்பங்களைக் கொண்டு செல்கிறார்.

अहं स्नातुं नदीं गच्छामि।

நான் ஸ்னானம் செய்ய ஆற்றுக்குப் போகிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

त्वं सिनेमां द्रष्टुं प्लासां गच्छसि।
நீ சினிமா பார்க்க பிளாசாவுக்குச் செல்கிறாய்.

पठ्, क्रीड्, पूज्, स्ना, दृश् - (पश्य) என்ற வினைப்பகுதிகளுடன் 'तुं' (tu) என்ற பிரத்யயத்தை (suffix) சேர்த்து पठितुं, क्रीडितुं, पूजयितुं, स्नातुं, द्रष्टुं என்ற சொற்கள் தயாரிக்கப்படுகின்றன. இவைகள் ஏகவசன, துவிவசன, பஹுவசனங்களிலோ, நிகழ்-இறந்த-வருங்-காலங்களிலோ, பிரதம, மத்யம, உத்தம புருஷன்களிலோ எந்த மாறுபாட்டையும் அடைவதில்லை. ஆகவே, அவ்யயங்கள் - மாறுபடாச் சொற்கள். இவற்றை துமுன்னந்த அவ்யயங்கள் என்று கூறுவர்.

இனி மேற்குறிப்பிட்ட ஐந்து வாக்கியங்களையும் இடம் மாற்றி அமைத்து பொருள் வேறுபடுவதைக் கவனிப்போம்.

१. रामः पाठालयं गच्छति रामः पठति।
२. कृष्णः मैदानं गच्छति कृष्णः क्रीडति।
३. पिता पुष्पाणि नयति पिता देवं पूजयति।
४. अहं नदीं गच्छामि अहं स्नामि।
५. त्वं प्लासां गच्छसि त्वं सिनेमां पश्यसि।

முதல் வாக்கியத்தில் குறிப்பிடப்பட்ட வினைத் தொழில்கள் நடந்த பிறகு, இரண்டாவது வாக்கியத்திலுள்ள வினைத் தொழில்கள் நடைபெறுகின்றன. உதாரணம்

1. ராமன் பள்ளிக்கூடம் சென்று படிக்கிறான்.

2. கிருஷ்ணன் மைதானம் சென்று விளையாடுகிறான்.

3. தந்தை மலர்களைக் கொண்டு சென்று இறைவனை வழிபடுகிறார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''சென்று, கொண்டு சென்று'' போன்ற சொற்களை गत्वा, नीत्वा என்று त्वा விகுதியைச் சேர்த்து அமைக்கிறோம். இவை அவ்யயங்களே. க்த்வாந்த அவ்யயங்கள் என்று கூறுவர்.

रामः पाठालयं गत्वा पठति।
ராமன் பள்ளிக்கூடம் சென்று படிக்கிறான்.

कृष्णः मैदानं गत्वा क्रीडति।
கிருஷ்ணன் மைதானம் சென்று விளையாடுகிறான்.

पिता पुष्पाणि नीत्वा देवं पूजयति।
தந்தை மலர்களைக் கொண்டு சென்று தேவனை வழிபடுகிறார்.

अहं नदीं गत्वा स्नामि।
நான் ஆற்றுக்குச் சென்று ஸ்நானம் பண்ணுகிறேன்.

त्वं प्लासां गत्वा सिनेमां पश्यसि।
நீ பிளாசாவுக்குச் சென்று சினிமா பார்க்கிறாய்.

கீழே குறிப்பிட்ட இறந்தகால வாக்கியங்களைக் கவனிக்கவும்.

मन्थरा नगरालङ्कारं अपश्यत् - कैकेय्याः समीपं अगच्छत्।
भरतः पितुः उत्तरक्रियां अकरोत् - रामं आनेतुं वनं अगच्छत्।
भरतः पादुके सिंहासने अस्थापयत् - राज्यं अरक्षत्।

முதல் வாக்கியத்திலுள்ள अपश्यत्, अकरोत्, अस्थापयत् என்ற இறந்தகால வினைச்சொற்களை க்த்வாந்த அவ்யயங்களாக மாற்றுவதன் மூலம் இரு வாக்கியங்களையும் ஒன்றாக இணைக்கலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

मन्थरा नगरालङ्कारं दृष्ट्वा कैकेय्याः समीपं अगच्छत्।
மந்தரை நகரின் அலங்காரத்தைப் பார்த்துவிட்டு கைகேயியிடம் சென்றாள்.

भरतः पितुः उत्तरक्रियां कृत्वा रामं आनेतुं वनं अगच्छत्।
பரதன் தந்தையின் ஈமச் சடங்குகளைச் செய்து (செய்துவிட்டு) ராமனை அழைத்துவரக் காடு சென்றான்.

भरतः पादुके सिंहासने स्थापयित्वा राज्यं अरक्षत्।
பரதன் பாதுகைக்ளை ஸிம்மாஸனத்தில் வைத்து அரசைப் பாதுகாத்தான்.

கீழேயுள்ள கட்டளை வினை இரட்டை வாக்கியங்களைக் கவனிக்கவும்.

त्वं नदीं गच्छ - स्नानं कुरु।
यूयं गुरुं नमत - वेदं पठत।
प्रश्नान् पठत - उत्तरं लिखत।

இவைகளையும் கீழேயுள்ளபடி இணைக்கலாம்.

त्वं नदीं गत्वा स्नानं कुरु।
நீ ஆற்றுக்குச் சென்று ஸ்நானம் செய்.

यूयं गुरुं नत्वा वेदं पठत।
நீங்கள் ஆசிரியரை வணங்கி வேதம் படியுங்கள்.

प्रश्नान् पठित्वा उत्तराणि लिखत।
கேள்விகளைப் படித்து, விடைகளை எழுதுங்கள்.

உதாரணங்களிலிருந்து காலங்களாலோ, வசனங்களாலோ, புருஷன்களாலோ இந்தச் சொற்கள் (**गन्तुं गत्वा, पठितुं पठित्वा** போன்றவை) மாறுவதில்லை. எனவே அவ்யயங்கள் என்று உணரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

வினைப்பகுதி	क्त्वान्त शब्दः	तुमुन्नन्त शब्दः
पठ	पठित्वा	पठितुं
படி	படித்து	படிக்க
क्रीड	क्रीडित्वा	क्रीडितुं
விளையாடு	விளையாடிவிட்டு	விளையாட
पूज	पूजयित्वा	पूजयितुं
வழிபடு	வழிபட்டு	வழிபட
गच्छ	गत्वा	गन्तुं
செல்	சென்று	செல்ல
नम	नत्वा	नन्तुं
வணங்கு	வணங்கி	வணங்க
भ्रम	भ्रान्त्वा	भ्रमितुं
சுற்ற	சுற்றி	சுற்ற
नी नय	नीत्वा	नेतुं
கொண்டு செல்	கொண்டு சென்று	கொண்டு செல்ல
पा पिब	पीत्वा	पातुं
குடி	குடித்து	குடிக்க
जि जय	जित्वा	जेतुं
வெல்	வென்று	வெல்ல
पाल	पालयित्वा	पालयितुं
காப்பாற்று	காப்பாற்றி	காப்பாற்ற
पत	पतित्वा	पतितुं
விழ்	விழுந்து	விழுவதற்கு

Digitization by eGangotri-South Center

वस	उषित्वा	वस्तुं
வசி	வசித்து	வசிக்க
चर	चरित्वा	चरितुं
அலை	அலைந்து	அலைய
यज	इष्ट्वा	यष्टुं
வேள்வி செய்	வேள்வி செய்து	வேள்வி செய்ய
मार	मारयित्वा	मारयितुं
கொல்	கொன்று	கொல்ல
तर्ज	तर्जयित्वा	तर्जयितुं
அதட்டு	அதட்டி	அதட்ட
कथ	कथयित्वा	कथयितुं
சொல்	சொல்லிவிட்டு	சொல்ல
रच	रचयित्वा	रचयितुं
அமை	அமைத்து	அமைக்க
भक्ष	भक्षयित्वा	भक्षयितुं
சாப்பிட	சாப்பிட்டு	சாப்பிட
अट	अटित्वा	अटितुं
திரி	திரிந்து	திரிய
वम	वमित्वा	वमितुं
கக்கு	கக்கி விட்டு	கக்க

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பயிற்சி: தமிழில் மொழி பெயர்க்கவும்.

सः क्षीरं पीत्वा पाठं पठति।

रामः मन्दिरं गत्वा देवं नमति।

यदा गोपालः अत्र आगच्छति तदा अहं अपि आगच्छामि।

कृष्णः स्नातुं नदीं गच्छति।

वयं भ्रमितुं बहिः गच्छामः।

चतुर्दशः पाठः — பாடம் 14

उपसर्गाः உபஸர்க்கங்கள்

உபஸர்க்கங்கள் என்ற சில அவ்யயச் சொற்கள் ஸம்ஸ்கிருதத்தில் உண்டு. அவ்வ பெரும்பாலும் வினைப்பகுதிகளின் முன்னர் இணையும்.

प्र परा अप सं अनु अव निस् निर् दुस् दुर् वि आ नि अधि अपि सु उत् अति अभि प्रति परि उप

என்று அவை மொத்தம் 22 என்று கூறுவர். இவற்றிற்குச் சாதாரண அவ்யயச் சொற்களைப் போல் தனியே பொருள் இல்லை. தனியே உபயோகமில்லை. என்றாலும் வினைச் சொற்களுடன் சேரும்போது தாதுவின் பொருளைப் பலவாறு மாற்றும் வல்லமை பெறுகின்றன. हृ-हर-हरति கொண்டு போகிறான் என்ற வினைச் சொல் உபஸர்க்கங்களுடன் சேரும்போது எவ்வாறு மாறுகின்றது என்பதைப் பார்ப்போம்.

प्र	हृ	प्रहरति	அடிக்கிறான்	प्रहरः	அடி
आ	हृ	आहरति	உணவு அருந்துகிறான்	आहारः	உணவு
सं	हृ	संहरति	கொல்கிறான்	संहारः	கொலை
वि	हृ	विहरति	விளையாடுகிறான்	विहारः	விளையாட்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

परि हृ परिहरति நீக்குகிறான் परिहारः பரிகாரம்
उद् हृ उद्धरति தூக்குகிறான், उद्धारः தூக்குதல்,
நிமிர்த்துகிறான் நிமிர்த்தல்.
अप हृ अपहरति திருடுகிறான் अपहारः திருட்டு

चोरः धनं हरति।
திருடன் செல்வத்தைக் கொண்டு போகிறான்.

भीमः राक्षसं प्रहरति।
பீமன் அரக்கனைத் தாக்குகிறான்.

बालकः मोदकं आहरति।
சிறுவன் கொழுக்கட்டையை உண்கிறான்.

रामः राक्षसान् संहरति।
ராமன் அரக்கர்களை அழிக்கிறான்.

बालाः सैकते विहरन्ति।
சிறுவர்கள் ஆற்று மணலில் விளையாடுகிறார்கள்.

वैद्यः औषधैः व्याधीन् परिहरति।
வைத்யர் மருந்துகளால் வியாதிகளை நீக்குகிறார்.

सर्पः फणां उद्धरति।
பாம்பு படத்தைத் தூக்குகிறது.

कृष्णः नवनीतं अपहरति।
கண்ணன் வெண்ணையைத் திருடுகிறான்.

உபஸர்க்கங்களால் ஏற்படும் மாறுதல்கள்

1. சில உபஸர்க்கங்கள் தாதுவின் அர்த்தத்தை எதிர்க்கின்றன.

गच्छति याति போகிறான் आगच्छति आयाति வருகிறான்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

नयति हरति கொண்டு செல்கிறான் — आनयति आहरति கொண்டு வருகிறான்.

ददाति यच्छति கொடுக்கிறான் — आददाति आयच्छति ஏற்கிறான்.

स्मरति நினைக்கிறான் — विस्मरति மறக்கிறான்.

2. சில தாதுவின் பொருளை மாற்றுவதில்லை. அலங்காரமாய் அமைகின்றன.

जयति வெல்கிறான் — विजयते வெல்கிறான்

विशति நுழைகிறான் — प्रविशति நுழைகிறான்

3. சில தாதுவின் பொருளை மாற்றுகின்றன. அப்போது செயப்படு பொருள்கள் குன்றாவினை (Transitive) குன்றியதாகவும், செயப்படு பொருள் குன்றியவினை (Intransitive) குன்றாதனவாகவும் மாறும்.

तिष्ठति நிற்கிறான் — अनुतिष्ठति அனுஷ்டிக்கிறான், செய்கிறான்.

भवति இருக்கிறான் — अनुभवति அனுபவிக்கிறான்

भवति இருக்கிறான் — अभिभवति அவமதிக்கிறான், தோற்கடிக்கிறான்.

4. தாதுவின் மூலப் பொருளை ஒட்டிக் கொஞ்சம் மாறுகின்றன (விசேஷப்படுத்துகின்றன). गच्छति செல்கிறான். अनु + गच्छति பின்னே செல்கிறான். उप + गच्छति அருகே செல்கிறான். सं + गच्छते ஒன்றுகூடிச் செல்கிறான். उद् + गच्छति மேலே செல்கிறது (எழும்புகிறது). ईक्षते பார்க்கிறான். परि + ईक्षते = परीक्षते

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சோதித்துப் பார்க்கிறான். सं + ईक्षते = समीक्षते ஆராய்ந்து பார்க்கிறான். उद् + ईक्षते = उदीक्षते அண்ணாந்து பார்க்கிறான். अप + ईक्षते = अपेक्षते தேவை என்ற எண்ணத்துடன் பார்க்கிறான், விரும்புகிறான். वदन्ति கருத்தொற்றுமையுடன் ஒருவருக்கொருவர் பேசுகிறார்கள். सं + वदन्ति ஸம்பாஷிக்கிறார்கள். वि + सं + वदन्ते = கருத்தொற்றுமை இல்லாமல் ஒருவருக்கொருவர் பேசுகிறார்கள்.

5. சில வினைச்சொல்லின் தொடர்பில்லாத பொருளைத் தருகின்றன. व्यायच्छति - திறக்கிறான். निगमयति பொருந்தச் செய்கிறான். अभिभवति எதிர்க்கிறான்.

தமிழில் மொழி பெயர்க்கவும்.

धनिकः दरिद्रेभ्यः धनं ददाति - यच्छति।

दरिद्रः धनिकात् धनं आददाति।

अहं गृहस्य द्वारं व्याददामि - व्यायच्छामि।

राजा शत्रुं जयति - विजयते।

धेनवः गोष्ठं विशन्ति - प्रविशन्ति।

साधवः अपि दुःखं अनुभवन्ति।

दुष्टाः साधून् अभिभवन्ति।

वत्सः मातरं अनुगच्छति।

शिष्याः गुरुं उपगच्छन्ति।

ஸம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கவும்.

ஆசிரியர் மாணவனைப் பரீக்ஷிக்கிறார்.

பண்டிதர் கவிதையை ஆராய்ந்து பார்க்கிறார்.

உழவன் வானத்தை அண்ணாந்து பார்க்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கெட்டவன் நல்லவனுடைய வார்த்தையை அலக்ஷியப்படுத்துகிறான்.

மாணவர்கள் வெற்றியை விரும்புகிறார்கள்.

पञ्चदशः पाठः — பாடம் 15

भविष्यत् कालः வருங்காலம்

1. विधिलिङ्। (POTENTIAL MOOD)

இதுவரை நிகழ்காலம், இறந்த காலம், கட்டளை என்ற மூன்று வகை வினைச் சொற்களைக் கற்றோம். கீழே வரும் பாடங்களில் வருங்காலம் பற்றி விளக்கம் தரப்படுகிறது. போவான், போகப் போகிறான், வருவான், வரப்போகிறான் என்ற சொற்கள் வருங்காலத்தைக் குறிப்பிட்டாலும், சிறிது பொருள் வேறுபடுவதுண்டு. போவான், வருவான் என்பவை போகக்கூடும், வரக்கூடும் என்று சிறிது ஐயப்பாட்டுடன் வருங்காலத்தைக் குறிப்பிடுகின்றன. போகப் போகிறான், வரப்போகிறான் என்பவை நிச்சயத்தையும் சேர்த்து வருங்காலத்தைக் குறிப்பிடுகின்றன.

சந்தேகத்துடன் கூடிய வருங்காலத்தைக் குறிப்பிடும்போது நம்பிக்கைக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. இதை ஆங்கில இலக்கண முறையில் Potential mood என்பர். ஸம்ஸ்கிருதத்தில் विधिलिङ् என்பர். விதிலிங் வடிவங்களைக் காண்போம்.

प्रथमपुरुषः	पठेत्	पठेतां	पठेयुः
मध्यमपुरुषः	पठेः	पठेतं	पठेत
उत्तमपुरुषः	पठेयं	पठेव	पठेम

ईत् ईतां इयुः ईः ईतं ईत ईयं ईव ईम என்பவை இதன் விகுதிகள். राम ईश्वर = रामेश्वर என்று மாறுவதுபோல் पठ् + अ + ईत् = पठेत् என்று மாறுதலடைகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अहं सायङ्काले आलयं गच्छेयम्।

நான் மாலை கோவிலுக்குப் போவேன்.

किं (अपि) त्वं रात्रौ क्षीरं पिबेः ?

நீ இரவில் பால் குடிப்பாயா?

सः अद्य आगच्छेत्।

அவன் இன்று வருவான்.

बालाः प्रातः प्रबुध्येयुः, स्नात्वा काफीं पीत्वा पाठान् पठेयुः, भुक्त्वा पाठशालां गच्छेयुः।

சிறுவர்கள் காலை எழுந்திருப்பார்கள். குளித்து காபி குடித்து விட்டு பாடம் படிப்பார்கள். சாப்பிட்டுவிட்டுப் பள்ளி செல்வார்கள்.

त्वं कदा गृहं आगच्छेः ?

நீ எப்பொழுது வீட்டிற்கு வருவாய்?

सः सूर्योदयात् पूर्वं शयनात् उत्तिष्ठेत्।

அவன் சூர்யோதயத்திற்குமுன் படுக்கையிலிருந்து எழுந்திருப்பான்.

त्वं निपुणः। प्रश्नानां उत्तराणि वदेः।

நீ கெட்டிக்காரன். கேள்விகளுக்கு விடை கூறுவாய்.

अद्य राधा जयलक्ष्मीश्च गायेताम्।

இன்று ராதாவும் ஜெயலக்ஷ்மியும் பாடுவார்கள்.

ग्रीष्मे तडागाः शुष्येयुः।

கோடையில் குளங்கள் வற்றிப் போய்விடும்.

उदकेन तृष्णा शाम्येत्।

தண்ணீரால் தாகம் தணியும்.

सत्यं वदेत्।

உண்மையைப் பேச வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

असत्यं न वदेत्।
பொய் பேசக் கூடாது.

परस्वं न हरेत्।
பிறர் பொருளைக் கவரக்கூடாது.

उद्यन्तं सूर्यं न पश्येत्।
உதயமாகும் சூரியனைப் பார்க்கக் கூடாது.

धयन्तीं गां न वारयेत्।
பால் கொடுக்கும் பசுவைத் தடை செய்யக் கூடாது.

रात्रौ वृक्षमूलानि परिवर्जयेत्।
இரவில் மரத்தடிகளைத் தவிர்க்க வேண்டும்.

பயிற்சி: கீழேயுள்ள வினைகளுக்கு 'विधिलिङ्' மூன்று நிலைகளிலும் எழுதுக.

वद्, पिब, यज, चर, भक्ष, वस।

विधिलिङ् வினைச்சொற்களுக்கு - சொல்லலாம், திருடலாம், காணலாம், தடுக்கலாம், தவிர்க்கலாம் என்றவாறு பொருள். பொய் கூறக்கூடாது. உண்மை சொல்லலாம் என்று பொருள் சொன்னால் 'அவர் ஒருவருக்கு மட்டும் பொருந்துகிறது. மற்றவர்களுக்கு இல்லை' என்பது கிடையாது. 'நான் உண்மை பேசலாம். நீ பேசாமலிருக்கலாம்'' என்று பொருள் கூறுவது பொருந்தாது. ஆகவே, கட்டளையாகப் பொருள் கூறப்பட்டுள்ளது. ஆகவே, எல்லோருக்கும் பொதுவாக உள்ளவற்றைக் கட்டளையாகவே ஏற்க வேண்டும். கட்டளை வினையால் தனிப்பட்டவருக்கு இடப்படும் கட்டளை குறிப்பிடப்படுகிறது. Potential moodஆல் பொது விதி குறிப்பிடப்படுகிறது. ஆகவே, Potential mood நம்பிக்கை, பொதுவிதி என்ற இரு பொருள்களை முக்கியமாகக் குறிக்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अनुवादमाला — २०

माधवः — नीलकण्ठ! स्वागतं ते।

नीलकण्ठः — आगच्छ! कियद् दूरं पर्यटेम।

माधवः — साधु। मातः! अहं नीलकण्ठेन सह पर्यटितुं गच्छामि।

माता — अस्तु। तक्रं पीत्वा गच्छतम्। शीघ्रं च प्रत्यागच्छतम्। (उभौ तक्रं पीत्वा निर्गच्छतः)

नीलकण्ठः — कथय। कीं दृशः ते विद्याभ्यासः?

माधवः — सम्यक् पठामि। प्रतिदिनं पाठ्यान् पाठान् पठित्वैव शयनाय गच्छेयम्।

नीलकण्ठः — कदा त्वं शयनात् उत्तिष्ठेः?

माधवः — प्रातः चतुर्थ्यां होरायां उत्तिष्ठेयम्। उत्थाय ईश्वरं स्मरेयम्। ततः दन्तान् क्षालयेयम्।

नीलकण्ठः — पाठान् न पठेः किम्?

माधवः — सार्धपञ्चमहोरापर्यन्तं पठेयम्। ततः स्नात्वा स्तोत्राणि पठित्वा क्षीरं पिबेयम्। अत्रान्तरे रामदासः शिवगुरुः च मम गृहं आगच्छेताम्।

नीलकण्ठः — कौ तौ रामदासशिवगुरू?

माधवः — प्रातिवेशिकौ वयस्यौ सतीर्थ्यौ। वयं सहैव गणितं - अभ्यस्येम, लेख्यानि च लिखेम।

नीलकण्ठः — कियदवधि यूयं पठेत?

माधवः — प्रायः सार्धनवमहोरावधि (होरापर्यन्तं) पठेम।

नीलकण्ठः — ततः?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

माधवः — ततः तौ स्वगृहं गच्छेताम्। भुक्त्वा पाठशालायै सज्जौ भवेताम्। अहमपि सज्जो भवेयम्। वयं त्रयः सहैव गच्छेम।

नीलकण्ठः — पाठशालायां मध्याह्नविरामः कदा भवेत्?

माधवः — त्रयोदशहोरातः चतुर्दशहोरापर्यन्तं विरामो भवेत्। तदा वयं आहारं कृत्वा संलेपम। पत्रिकाः पठेम।

नीलकण्ठः — किं सर्वे बालाः पत्रिकाः पठेयुः?

माधवः — न, न। केचित् पठेयुः। केचित् गृहं गत्वा आगच्छेयुः। अन्ये मैदाने तरुतलेषु क्रीडेयुः।

नीलकण्ठः — सायङ्काले कदा गृहं आगच्छेः?

माधवः — सायङ्काले सार्धचतुर्थहोरायां पाठशाला विरमेत्। ततः मुहूर्तं व्यायामाभ्यासः भवेत्। ततः गृहं आगच्छेम।

नीलकण्ठः — गृहे सायङ्कालं कथं नयेः?

माधवः — गृहे सोदरीं बालिकां क्रीडनकैः विनोदयेयम्। ततः प्रदोषे आलयं गत्वा देवं नमेयम्। गृहं प्रत्यागत्य भुक्त्वा दशमहोरापर्यन्तं तस्मिन् दिने पठितान् पाठान् चिन्तयेयम्।

नीलकण्ठः — समीचीना ते दिनचर्या। इदानीं गृहं प्रतिगच्छेव। (उभौ गृहं प्रत्यागच्छतः)

மேற்கண்டவற்றைத் தமிழில் மொழி பெயர்க்கவும்:-

[स्वागतं - நல்வரவு; कियद्दूरं - சிறிது தூரம்; निर्गच्छतः - வெளிக் கிளம்புகிறார்கள்; पर्यटेम - உலாவி வருவோம்; सार्ध पञ्चमहोरा - ஐந்தரை மணி; प्रातिवेशिकः

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

-எதிர்வீட்டுக்காரர்; सतीर्थ्यः - வகுப்புத் தோழர்; कियदवधि -எதுவரை; सार्धनवम - ஒன்பதரை; व्यायामाभ्यासः -உடற்பயிற்சி; मुहूर्तं - சிறிது நேரம்; चिन्तयेयं - சிந்தனை செய்வேன்; अभ्यस्येम - படித்து எழுதிப் பழகுவோம்; सज्जः - தயாராயிருப்பவன்.]

ஸம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கவும்

1. தருமம் செய்ய வேண்டும்.
2. இரவில் ஒருவனாகச் செல்லக் கூடாது.
3. எப்போதும் பிறர் நலத்தையே நினைக்க வேண்டும்.
4. மழை பெய்யும்போது ஓடக் கூடாது.
5. பாழும் வீட்டில் ஒருவனாக வசிக்கக் கூடாது.
6. நண்பர்களுக்குத் துரோகம் செய்யக் கூடாது.
7. பெரியோர்களிடம் வணக்கமுடையவனாக இருக்க வேண்டும்.
8. கோள் சொல்பவனாக இருக்கக் கூடாது.
9. எப்போதும் விழிப்புடையவனாக (ஜாக்கிரதையாக) இருக்க வேண்டும்.

[चरेत् - செய்ய வேண்டும்; एकाकी - ஒருவனாக; वर्षति - மழை பெய்யும் போது; शून्यगृहे - பாழும் வீட்டில்; मित्रेभ्यः - நண்பர்களுக்கு; विनीतः - வணக்கமுடையவன்; पिशुनः - கோள் சொல்பவன்; जागरूकः - விழிப்பு உடையவன்.]

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

षोडशः पाठः — பாடம் 16

भविष्यत्कालः வருங்காலம் (2) (FUTURE TENSE)

पठिष्यति	படிக்கப் போகிறான்	पठ्	इष्य	ति
रक्षिष्यसि	காப்பாற்றப் போகிறாய்	रक्ष्	इष्य	सि
चरिष्यामि	திரியப் போகிறேன்	चर्	इष्य	मि
लिखिष्यावः	இருவர் எழுதப் போகிறோம்	लिख्	इष्य	वः
क्रीडिष्यामः	விளையாடப் போகிறோம்	क्रीड्	इष्य	मः
गमिष्यन्ति	செல்லப் போகிறார்கள்	गम्	इष्य	अन्ति
पास्यति	குடிக்கப் போகிறான்	पा	स्य	ति
वत्स्यति	வசிக்கப் போகிறான்	वस्	स्य	ति
स्थास्यथ	நிற்க/இருக்கப் போகிறீர்கள்	स्था	स्य	थ

சென்ற பாடத்தில் विधिलिङ् (சந்தேகத்துடன் கூடிய வருங்காலம்) பற்றிக் கற்றோம். இப்பாடத்தில் நிச்சயத்துடன் கூடிய வருங்காலம் காட்டும் வினைச்சொற்களைக் கற்போம். இச்சொற்களில் लुट्, लृट् என இரு வகைகள் உண்டு. लुट् அதிகம் வழக்கில் இல்லை. लृट् அதிகம் வழக்கில் உள்ளது. அதன் உதாரணங்கள் மேலே தரப்பட்டுள்ளன.

பாடம் 11ல் தாது + விகரணபிரத்யயம் + விகுதி = வினைச்சொல் என்று படித்தோம். भविष्यत् काल த்தில் தாது + வருங்காலம் காட்டும் இடைநிலை + விகுதி = வினைச் சொல் என்பது சூத்ரமாய் அமைகிறது. स्य என்பது भविष्यत्

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

काल பிரத்யயம். அது சில தாதுக்களுடன் சேரும் போது इ என்ற எழுத்தைச் சேர்த்துக் கொண்டு इष्य என்று மாறுகிறது. சில இடத்தில் इ எடுத்துக் கொள்ளாமல் स्य என்றோ, ष्य என்றோ காணப்படுகிறது.

மற்றொரு விசேஷமும் கவனிக்க வேண்டும். சில தாதுக்கள் இரட்டைத் தாதுக்கள். உதாரணம் गम् (गच्छ) पा (पिब) स्था (तिष्ठ) இவை போன்றவற்றில் गम् पा स्था போன்ற முதலாவது பகுதியின் அடிப்படையிலேதான் வருங்கால வினைச்சொற்களைத் தயாரிக்க வேண்டும். गच्छ पिब तिष्ठ என்ற இரண்டாவது வினைப் பகுதியின் அடிப்படையில் நிகழ்காலம், இறந்தகாலம், கட்டளை, சந்தேகத்துடன் கூடிய வருங்காலம் இவை அமைந்தன. உதாரணம் पिबति, अपिबत्, पिबतु, पिबेत् என. ஆனால் गमिष्यति, पास्यति, स्थास्यति என்று முதல் பகுதி அமைப்பில் உள்ள சரியான வருங்கால வினைச் சொற்கள்.

எந்த வினைச் சொற்களுக்கு इष्य என்ற இடைநிலை வரும்? எவற்றுக்கு स्य என்ற இடைநிலை வரும் என்று தீர்மானிப்பது சிக்கலானது.

अनुवादमाला — २१

श्वः अहं चेन्नपुरीं गमिष्यामि। त्वं कदा मह्यं पुस्तकं दास्यसि ? श्वः सायं गृहं आगच्छ, पुस्तकं दास्यामि। परश्वः मम स्वसुः विवाहः भविष्यति। बान्धवाः मम गृहं आगमिष्यन्ति। मासस्य अन्ते दीपावलीमहोत्सवः भविष्यति। सूर्योदयात् पूर्वं जनाः तैलस्नानं करिष्यन्ति। नूतनवस्त्राणि धारयिष्यन्ति। भक्ष्याणि भक्षयिष्यन्ति। मित्रेभ्यः तानि वितरिष्यन्ति। परस्परं गङ्गास्नानं प्रक्ष्यन्ति। बालकाः

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

प्रस्फोटान् स्फोटयिष्यन्ति। बालिकाः ज्वालिनीः दीपयिष्यन्ति। तस्मिन् दिने पाठशाला न प्रचलिष्यति। सर्वे कार्यालयाः च न प्रचलिष्यन्ति।

மேற்கண்டவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கவும்:

[प्रक्ष्यन्ति - கேட்பார்கள்; प्रस्फोटः - வெடி; ज्वालिनी - மத்தாப்பூ; वितरिष्यन्ति - தருவார்கள்.]

ஸம்ஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கவும்.

1. என் தந்தை காசிக்குச் செல்லப் போகிறார்.

2. நான் கடிதம் எழுதப் போகிறேன்.

3. ராமேச்வரத்திலிருந்து ரயில் வரப்போகிறது.

4. ராமன் இல்லாமல் ஸீதை எப்படி உயிர் வாழப் போகிறாள்?

5. அவர்கள் உண்மையைச் சொல்லப் போகிறார்கள்.

6. இன்று தலைமையாசிரியர் பரிசுகளைக் கொடுக்கப் போகிறார்.

7. இன்று ஸங்கீத ஸபையில் ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணா பாடப் போகிறார்.

[पट्टिकयानं - ரயில்; पारितोषिकं - பரிசு; गास्यति - பாடப் போகிறார்; रामं विना - ராமன் இல்லாமல்.]

सप्तदशः पाठः — பாடம் 17

लृङ् நிபந்தனை Conditional Mood

ஸம்ஸ்க்ருத பாஷையில் காலம் காட்டும் வினைச் சொற்கள் (Tenses) ஆறு வகைப்படும். நிகழ்காலம் (वर्तमान कालः) ஒரு வகைதான் உண்டு. இறந்தகாலம் (भूत कालः)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மூன்று வகையாக உள்ளது. வருங்காலம் (भविष्यत् कालः) இரண்டு வகையாக உள்ளது. இவற்றில் நிகழ்காலம், இறந்த காலம், வருங்காலம் (லட், லங், ல்ருட்) (गच्छति-अगच्छत्-गमिष्यति) வகைக்கு ஒன்று கற்றோம். இறந்த காலத்தில் உள்ள மற்ற இரண்டு வகைகள் (லுங், லிட்) அதிகம் வழக்கில் உள்ளவைகளானாலும் சற்று கடினமானவை. வருங்காலத்தின் மற்றொரு வகை (லுட்) அதிகம் வழக்கில் இல்லாதது. எனவே, அவற்றைப் பின்னர் கற்போம்.

காலம் காட்டாத வினைச் சொற்கள் (Moods) நான்கு வகைப்படும். அவற்றில் கட்டளை - லோட் (आज्ञार्थकं), பொதுவிதி - விதிலிங் (विधिलिङ्) என்ற இரண்டு வகைகளை முன் பாடங்களில் கற்றோம். வாழ்த்து ஆசீர்லிங் (आशीर्लिङ्) என்று ஒரு வகை உள்ளது. நிபந்தனையை (हेतु-हेतुमद्भावः) குறிப்பிடும் வினைச் சொல் வகையை இப்பாடத்தில் கற்போம்.

पठति पठतः पठन्ति, लिखति लिखतः लिखन्ति என்ற நிகழ்கால வினைச்சொற்கள் अपठत् अपठतां अपठन्, अलिखत् अलिखतां अलिखन् என்று இறந்தகால வினைச்சொற்களாக மாறுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். வினைச் சொற்களுக்கு முன்னால் 'अ' வைச் சேர்க்கிறோம். ति, तः, अन्ति என்ற நிகழ்கால விகுதிகளுக்குப் பதிலாக त्, तां, अन् என்ற இறந்தகால விகுதியைப் பின்னால் சேர்க்கிறோம். पठति पठतः पठन्ति என்ற வினைச் சொற்கள் अपठत् अपठतां अपठन् என்று மாறி வருகின்றன.

அதுபோல் पठिष्यति पठिष्यतः पठिष्यन्ति என்ற வருங்கால

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வினைச்சொற்கள் अपठिष्यत् अपठिष्यतां अपठिष्यन् என்று மாறி நிபந்தனையைக் குறிப்பிடுகின்றன.

நிபந்தனை என்றால் என்ன?

நான் பணம் தருகிறேன். கடைக்காரர் சாமான் தருகிறார்.

நீ நன்கு படித்தாய். பரீக்ஷையில் வெற்றி பெற்றாய்.

நான் சென்னை செல்லப் போகிறேன். அவனைப் பார்க்கப் போகிறேன்.

இந்த இரட்டை வாக்கியங்களை நான் பணம் தருகிறேனானால் கடைக்காரர் சாமான் தருவார். நீ நன்கு படித்திருந்தால் பரீக்ஷையில் வெற்றி பெற்றிருப்பாய். நான் சென்னை செல்வேனானால் அவனைப் பார்ப்பேன் என்று இணைக்கலாம்.

இவை நிபந்தனையை (हेतु-हेतुमद्भावः) ஒன்று மற்றொன்றுக்குக் காரணமாயிருப்பதைத் தெரிவிக்கின்றனவேயன்றி நிகழ்காலத்தையோ, இறந்தகாலத்தையோ, வருங்காலத்தையோ குறிப்பிடுவதில்லை.

अहं धनं यच्छामि, आपणिकः धान्यं यच्छति। (நான் பணம் தருகிறேன், கடைக்காரர் சாமான் தருகிறார்) என்ற வாக்கியம் यदि अहं धनं अदास्यं, तर्हि आपणिकः धान्यं अदास्यत् (நான் பணம் தருவேனானால் கடைக்காரர் தான்யம் தருவார்) என்று மாறுகிறது.

त्वं सम्यक् अपठः, परीक्षायां उत्तीर्णः अभवः। (நீ நன்கு படித்தாய், பரீக்ஷையில் தேறியவன் ஆனாய்) என்ற வாக்கியம் यदि त्वं सम्यक् अपठिष्यः, परीक्षायां उत्तीर्णः अभविष्यः। (நீ நன்கு படித்திருந்தால் பரீக்ஷையில் தேறியவனாக ஆகியிருப்பாய்) என்று மாறுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

यदि तर्हि (If so) என்ற அவ்யயங்கள் இந்த நிபந்தனையைக் குறிப்பிடுகின்றன.

வினைப்பகுதி	நிகழ்காலம்	இறந்தகாலம்	வருங்காலம்	நிபந்தனை
दा-यच्छ	यच्छति	अयच्छत्	दास्यति	अदास्यत्
पठ	पठति	अपठत्	पठिष्यति	अपठिष्यत्
भू-भव	भवसि	अभवः	भविष्यसि	अभविष्यः
गम्-गच्छ्	गच्छामि	अगच्छं	गमिष्यामि	अगमिष्यं
दृश-पश्य	पश्यामि	अपश्यं	द्रक्ष्यामि	अद्रक्ष्यम्

மேலே காட்டிய பட்டியலிலிருந்து நிகழ்கால வினைச்சொற்களின் அடிப்படையிலிருந்து இறந்தகால வினைச்சொற்கள் அமைவதுபோல், வருங்கால வினைச்சொற்களின் அடிப்படையிலிருந்து நிபந்தனை வினைச்சொற்கள் அமைகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

கீழே சில உதாரணங்கள் தரப்படுகின்றன.

यदि हनुमान् समुद्रं न अतरिष्यत्, तर्हि रामः सीतं न आप्स्यत्।

அனுமான் கடலைக் கடந்திராவிட்டால் ராமன் சீதையைப் பெற்றிருக்க முடியாது.

यदि त्वं मम अग्निप्रवेशं न अद्रक्ष्यः, तर्हि तव इयं आज्ञा समीचीना अभविष्यत्।

நீ எனது தீக்குளியலைக் கண்டிருந்திராவிட்டால் உனது இக்கட்டளை நேர்மையானதாக இருந்திருக்கும்.

यदि मम गर्भगतं तव अपत्यं न अन्तरायः अभविष्यत्, तर्हि अहं प्राणं अत्यक्ष्यम्।

உனது கருவில் உள்ள உன் குழந்தை தடையாக இராவிட்டால் நான் உயிர் விட்டிருப்பேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

यदि वयं पाठं सम्यक् अपठिष्याम तर्हि वयं उत्तीर्णाः अभविष्याम।
நாம் பாடம் நன்கு படித்திருந்தோமானால் பரீக்ஷையில் தேறியவர்களாக இருப்போம்.

अनुवादमाला — २२

इदं किम्? इयं मम लेखिनी।
तत् किम्? तत् मम शिरस्त्राणम्।
तव निचोलकं कुत्र वर्तते?
मम निचोलकं पेटिकायां विद्यते।
पुष्पं कुत्र वर्तते? पुष्पं शिरसि मया निहितम्।
कन्दुकं कुतो न दृश्यते? कन्दुकं भस्त्रिकायां विद्यते।

[शिरस्त्राणं - தலைப்பாகை; निचोलकं - சட்டை; शिरसि - தலையில்; निहितं - வைக்கப்பட்டுள்ளது; भस्त्रिका -பை.]

अनुवादमाला — २३

रामः देशीयविद्याशालायां पठति। सः छात्रालये वसति। सः नवम्यां कक्ष्यायां ग. वर्गे पठति। सः सायं क्रीडाङ्गणे कन्दुकेन खेलति। सः पाठान् सम्यक् पठति। तस्य पिता मधुरायां वसति। छात्रालयाय देयं सः धनादेशेन प्रेषयति। छात्रालये वासाय प्रतिमासं शतं रूप्यकाणि देयानि। तत्र शतं अपवरकाः सन्ति। एकस्मिन् अपवरके चत्वारः माणवकाः वसन्ति।

[छात्रालयः - மாணவர் விடுதி; कक्ष्या - வகுப்பு; वर्गः - பிரிவு (செக்ஷன்); क्रीडाङ्गणं - விளையாட்டு மைதானம்; देयं - கொடுக்க வேண்டியது - கட்டணம்; धनादेशः -மணியார்டர்; अपवरकः - அறை.]

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अनुवादमाला — २४

अस्यां कक्ष्यायां सप्त वर्गाः सन्ति। क. वर्गः, ख. वर्गः, ग. वर्गः, घ. वर्गः, ङ. वर्गः, च. वर्गः, छ. वर्गः इति तेषां नाम। एकस्मिन् वर्गे त्रिंशत् माणवकाः पठन्ति। पञ्चानां माणवकानां एकः नेता। तव वर्गे कति नेतारः सन्ति? मम कक्ष्यायां पञ्च नेतारः भवन्ति। मम वर्गे गोपालः रामुः च पठतः। किं श्रीनिवासः वासुदेवः च तव वर्गे पठतः? श्रीनिवासः मम वर्गे पठति। वासुदेवः च. वर्गे पठति।

[नेता - தலைவர்.]

अनुवादमाला — २५

मम कक्ष्यायां त्रिचतुराः विद्यार्थिनः पुरस्कारान् लभन्ते। अस्मिन् वत्सरे रामुः सर्वेषां माणवकानां उत्तमः। तस्मै पञ्चपाणि पुस्तकानि पारितोषिकाणि दत्तानि। श्रीनिवासः कक्ष्यायां द्वितीयः। तस्मै लेखिनी दत्ता। रमा तृतीया। तस्यै पेटी दत्ता। अहमपि पारितोषिकाय स्पृहयामि। अतः सम्यक् पाठान् पठामि।

[पुरस्कारः, पारितोषिकम् - பரிசு.]

अष्टादशः पाठः — பாடம் 18

१. हलन्त शब्दाः மெய்யெழுத்தில் முடிந்த சொற்கள்

முந்தைய பாடங்களில் अजन्त (अ, इ, उ, ऋ என்ற உயிர் எழுத்தில் முடிந்த) சப்தங்களைக் கற்றோம். இனி हलन्त (மெய்யெழுத்துக்களில் முடிந்த) சப்தங்களைக் கற்போம். மெய்யெழுத்து 34. எல்லா மெய்யெழுத்துக்களிலும் முடிந்த சொற்கள் இல்லை. இருந்தாலும் வழக்கில் அதிகமில்லை. च् ज् त् द् न् भ् र् व् श् ष् स् ह् என்ற 12 எழுத்துக்களில் முடியும் சொற்கள் அதிகம் வழக்கில் உள்ளன. அவற்றிலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புல்லிங்க, ஸ்த்ரீலிங்க, நபும்ஸகலிங்கச் சொற்கள் உண்டு. கீழே हलन्त சொற்களின் பகுதியும் அதன் முதல் வேற்றுமை ரூப்மும், பொருளும் தரப்படுகின்றன.

जलमुच्	पुं	जलमुक्	जलमुचौ	जलमुचः	மேகம்
वाच्	स्त्री	वाक्	वाचौ	वाचः	வாக்கு
भिषज्	पुं	भिषक्	भिषजौ	भिषजः	வைத்தியன்
स्रज्	स्त्री	स्रक्	स्रजौ	स्रजः	மாலை
असृज्	न	असृक्	असृजी	असृञ्जि	ரத்தம்
मरुत्	पुं	मरुत्	मरुतौ	मरुतः	காற்று
सरित्	स्त्री	सरित्	सरितौ	सरितः	நதி
जगत्	न	जगत्	जगती	जगन्ति	உலகம்
पचत्	पुं	पचन्	पचन्तौ	पचन्तः	சமைக்கின்ற
पचत्	स्त्री	पचन्ती	पचन्त्यौ	पचन्त्यः	சமைக்கின்ற
पचत्	न	पचत्	पचती	पचन्ति	சமைக்கின்ற
धीमत्	पुं	धीमान्	धीमन्तौ	धीमन्तः	புத்தியுள்ள
धीमती	स्त्री	धीमती	धीमत्यौ	धीमत्यः	புத்தியுள்ள
धीमत्	न	धीमत्	धीमती	धीमन्ति	புத்தியுள்ள
महत्	पुं	महान्	महान्तौ	महान्तः	பெருமையுள்ள
महत्	स्त्री	महती	महत्यौ	महत्यः	பெருமையுள்ள
महत्	न	महत्	महती	महन्ति	பெருமையுள்ள
दिविषद्	पुं	दिविषत्	दिविषदौ	दिविषदः	தேவர்
ककुद्	स्त्री	ककुत्	ककुदौ	ककुदः	திமில்
हृद्	न	हृत्	हृदी	हृन्दि	ஹ்ருதயம்
क्षुध्	स्त्री	क्षुत्	क्षुधौ	क्षुधः	பசி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குறிப்பு:

1. நபும்ஸகலிங்கச் சொற்கள் மூன்றாம் வேற்றுமையிலிருந்து புல்லிங்கச் சொற்கள் போல் வரும்.

2. तकारान्तச் சொற்கள் நான்கு வகைகளாக ஆகின்றன. मरुत् என்பது சாதாரண तकारान्त பதம். पचत् धीमत् महत् என்ற तकारान्तச் சொற்கள் ஒன்றுக்கு ஒன்று அதிக வேறுபாடு அடைகின்றன.

3. पचत् धीमत् महत् என்பவை விசேஷணச் சொற்கள். எனவே, 3 லிங்கங்களிலும் வரும். ஸ்திரீலிங்கத்தில் அவை ई என்ற ஸ்த்ரீலிங்கப் பிரத்யயத்தை எடுத்துக் கொண்டு पचन्ती धीमती महती என்று गौरी சப்தம்போல் ரூபங்களைப் பெறுகின்றன.

இவைகளின் சப்த ரூபங்கள் கற்க எளிதானவை. சிறிது வேறுபாடுகளையே அடைந்து பெரும்பாலும் ஒன்றுபோல் வருகின்றன.

१. "जलमुच्" शब्दः चकारान्तः पुंलिङ्गः - மேகம்

வேற்றுமை உருபுகள்

प्र	जलमुक्	जलमुचौ	जलमुचः	स्	औ	अः
द्वि	जलमुचं	जलमुचौ	जलमुचः	अं	औ	अः
तृ	जलमुचा	जलमुग्भ्यां	जलमुग्भिः	आ	भ्यां	भिः
च	जलमुचे	जलमुग्भ्यां	जलमुग्भ्यः	ए	भ्यां	भ्यः
पं	जलमुचः	जलमुग्भ्यां	जलमुग्भ्यः	अः	भ्यां	भ्यः
ष	जलमुचः	जलमुचोः	जलमुचां	अः	ओः	आं
स	जलमुचि	जलमुचोः	जलमुक्षु	इ	ओः	सु
सं-प्र	हे जलमुक्	जलमुचौ	जलमुचः	स्	औ	अः

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெரும்பாலும் भ्यां भिः भ्यः सु என்று விகுதிகள் சேரும்போது முன்னுள்ள மெய்யெழுத்துக்கள் சிறிது வேறுபடுகின்றன. प्रथमैकवचन த்தில் स् மறைந்தே விடுகிறது. மற்ற இடங்களில் வெறும் கூட்டலே.

२. ''वाच्'' शब्दः चकारान्तः स्त्रीलिङ्गः - வாக்கு

वाक्	वाचौ	वाचः
वाचं	वाचौ	वाचः
वाचा	वाग्भ्यां	वाग्भिः

மற்றவை புல்லிங்கத்தைப் போலவே உள்ளது. 7ம் வேற்றுமை பன்மை वाक्षु

३. ''भिषज्'' शब्दः जकारान्तः पुंलिङ्गः - வைத்யர்

भिपक्	भिपजौ	भिषजः
भिषजं	भिषजौ	भिषजः
भिषजा	भिषग्भ्यां	भिषग्भिः

இதுபோல மற்ற வேற்றுமைகளையும் எழுதவும். 7ம் வேற்றுமை பன்மை भिषक्षु.

४. 'स्रज्' शब्दः जकारान्तः स्त्रीलिङ्गः - மாலை

स्रक्	स्रजौ	स्रजः
स्रजं	स्रजौ	स्रजः
स्रजा	स्रग्भ्यां	स्रग्भिः

மற்றவை भिषज् போல், 7ம் வேற்றுமை பன்மை स्रक्षु

५. 'असृज् शब्दः जकारान्तः नपुंसकलिंगः - இரத்தம்

असृक्	असृजी	असृञ्जि
असृक्	असृजी	असृञ्जि
असृजा	असृग्भ्यां	असृग्भिः

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மற்றவை भिषज् போல். 7ம் வேற்றுமை பன்மை भिषक्षु

६. 'मरुत्' शब्दः तकारान्तः पुंलिङ्गः - காற்று

मरुत्	मरुतौ	मरुतः
मरुतं	मरुतौ	मरुतः
मरुता	मरुद्भ्यां	मरुद्भिः

இதுபோல் எல்லா வேற்றுமைகளையும் எழுதவும். 7ம் வேற்றுமை பன்மை मरुत्सु

७. 'सरित्' शब्दः तकारान्तः स्त्रीलिङ्गः - ஆறு

सरित्	सरितौ	सरितः
सरितं	सरितौ	सरितः
सरिता	सरिद्भ्यां	सरिद्भिः

மேல் புல்லிங்கத்தைப்போல், 7ம் வேற்றுமை பன்மை सरित्सु

७. 'जगत्' शब्दः तकारान्तः/ नपुंसकलिङ्गः - உலகம்

जगत्	जगती	जगन्ति
जगत्	जगती	जगन्ति
जगता	जगद्भ्यां	जगद्भिः

மற்ற வேற்றுமைகள் புல்லிங்கத்தைப்போல், 7ம் வேற்றுமை பன்மை जगत्सु

கவனிக்கவும்: मरुत् जगत् सरित् என்ற तकारान्त சாதாரண சப்தங்களை மூன்று லிங்கங்களிலும் கற்றுக் கொண்டோம். இனி पचत् धीमत् महत् என்ற மூன்று விசேஷ வகைகள் விளக்கப்படுகின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

९. 'पचत्' शब्दः तकारान्तः पुंलिङ्गः (2வது)

पचन्	पचन्तौ	पचन्तः
पचन्तं	पचन्तौ	पचतः
पचता	पचद्भ्यां	पचद्भिः

மற்ற வேற்றுமைகள் मरुत् சப்தத்தைப் போல், 7ம் வேற்றுமை பன்மை पचत्सु.

இந்த சப்தம் முதல் 5 எண்களில் मरुत् சப்தத்திலிருந்து வேறுபடுகிறது. पचत् என்ற சொல்லுக்கு 'சமைக்கின்ற' என்று பொருள். இது நிகழ்வினை எச்சம் (Present Participle). இது போல் गच्छन् (செல்கின்ற), पठन् (படிக்கின்ற), लिखन् (எழுதுகின்ற) போன்ற சொற்கள் அமைகின்றன. परस्मैपद தாதுக்களின் வினைப் பகுதிகளுடன் अत् என்ற நிகழ்கால வினையெச்ச விகுதியைச் சேர்த்தால் लिखत्, पश्यत्, कुप्यत्, कथयत् போன்ற நிகழ்கால வினை எச்சங்கள் கிடைக்கும். அது பும்லிங்கத்தில் முதல் வேற்றுமையிலும், இரண்டாம் வேற்றுமையிலும் மேலே கண்டவாறு மாறுபடுகிறது. ஸ்திரீலிங்கத்தில் पचन्ती, लिखन्ती, पश्यन्ती, कुप्यन्ती, कथयन्ती என்றெல்லாம் மாறுபடுகிறது. நபும்ஸகலிங்கத்தில் पचत्, लिखत्, पश्यत्, कुप्यत्, कथयत् என்று जगत् சப்தத்தைப்போல் ரூபங்களைப் பெறுகிறது. ஸ்திரீலிங்கத்திலும், நபும்ஸகலிங்கத்திலும் पचत् போன்ற சப்தங்களின் ரூபங்கள் தரப்படுகின்றன.

पचन्ती	पचन्त्यौ	पचन्त्यः	पचत्	पचती	पचन्ति
पचन्तीं	पचन्त्यौ	पचन्तीः	पचत्	पचती	पचन्ति
पचन्त्या	पचन्तीभ्यां	पचन्तीभिः	पचता	पचद्भ्यां	पचद्भिः

மற்றவை गौरी சப்தம் போல். மற்றவை जगत् சப்தம்போல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குறிப்பு: पचन्ति என்ற இந்தச் சொல் पचत् என்ற நபும்ஸகலிங்கச் சொல்லின் முதல் இரண்டு வேற்றுமைகளின் பன்மையாக வரும். रथ्यायां पचन्ति कुटुम्बानि (தெருவில் சமைக்கின்ற குடும்பங்கள் என்ற பொருளில்) விசேஷணமாக வருகிறது. இதே சொல் गृहेषु स्त्रियः अन्नं पचन्ति என்று வரும்போது பெண்டிர் வீடுகளில் உணவு சமைக்கின்றனர் என்று நிகழ்கால வினைச் சொல்லாக வருகிறது.

கீழே சில உதாரண வாக்கியங்கள் தரப்படுகின்றன.

१. गोपबालाः कृष्णं पश्यन्ति।
இடைச் சிறுவர்கள் கண்ணனைக் காண்கிறார்கள்.

कृष्णं पश्यन्ति नेत्राणि न तृप्यन्ति।
கண்ணனைக் காண்கின்ற கண்கள் திருப்தி அடைகிறதில்லை.

२. ग्रीष्मे तृणानि शुष्यन्ति।
கோடையில் புற்கள் உலர்ந்து போகின்றன.

गावः शुष्यन्ति तृणानि न भक्षयन्ति।
பசுக்கள் உலர்கின்ற புற்களைச் சாப்பிடுகிறதில்லை.

३. लतासु कुसुमानि विकसन्ति।
கொடிகளில் புஷ்பங்கள் மலர்கின்றன.

बाला विकसन्ति कुसुमानि आनयति।
சிறுமி மலர்கின்ற புஷ்பங்களைக் கொண்டு வருகிறாள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

४. आतपे आमलकबीजानि स्फुटन्ति।

வெயிலில் நெல்லி விதைகள் வெடிக்கின்றன.

स्फुटन्ति आमलकबीजानि सर्वतः प्रसरन्ति।

வெடிக்கின்ற நெல்லி விதைகள் எங்கும் பரவுகின்றன.

மேலே கொடுக்கப்பட்ட வாக்கிய இணைகளில் पश्यन्ति, शुष्यन्ति, विकसन्ति, स्फुटन्ति என்ற சொற்கள் வினைச் சொற்களாகவும், வினையெச்சங்களாகவும் உபயோகப்-பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

இனி மூன்றாவது வகையைக் கவனிப்போம்.

१०. 'धीमत्' शब्दः तकारान्तः पुंलिङ्गः 3வது வகை

धीमान्	धीमन्तौ	धीमन्तः
धीमन्तं	धीमन्तौ	धीमतः
धीमता	धीमद्भ्यां	धीमद्भिः

மற்ற வேற்றுமைகள் முன்போல். धीमान् என்பதற்குப் புத்தி, உடையவன் என்று பொருள். अ அல்லது आ வில் முடிந்த பண்புப் பெயர்களுடன் वत् என்ற பிரத்யயம் சேரும். (உதாரணம்) धन, बल, गुण, दया, क्रिया, माला என்ற சொற்கள் धनवत्, बलवत्, गुणवत्, दयावत्, क्रियावत्, मालावत् என்று ஆகின்றன.

धनवान्	धनवन्तौ	धनवन्तः
बलवान्	बलवन्तौ	बलवन्तः
गुणवान्	गुणवन्तौ	गुणवन्तः
दयावान्	दयावन्तौ	दयावन्तः
क्रियावान्	क्रियावन्तौ	क्रियावन्तः
मालावान्	मालावन्तौ	मालावन्तः

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்ற ரூபங்கள் வரும்.

1. கீழேயுள்ள சொற்களுக்கு ஸம்ஸ்க்ருத பதங்களை எழுதுக.
வெடிக்கிறது, சமைக்கிறாள், பார்க்கிறான், பரவுகிறது, எழுதுகிறான், கோபிக்கின்ற, மலர்கின்ற.

2. पचत्, धीमत्, पश्यन्ति என்ற சப்தங்களின் 4, 6, 7 வேற்றுமை ரூபங்களை எழுதுக.

3. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து முழு வாக்கியத்தை எழுதுக.

रामः ______ पत्रं ______ [लिख्]

ते गृहे अन्नं ______ ।

लताः भूमौ ______ वर्षाकाले ______ ।

धनवान् दरिद्रेभ्यः ______ ।

एकोनविंशः पाठः — பாடம் 19

ஹலந்த சப்தங்கள் (2)

इ उ ऋ இந்த எழுத்துக்களில் முடியும் பண்புப் பெயர்களுடன் मत् என்ற பிரத்யயம் சேரும். உதாரணம் बुद्धि, श्री, धी, पशु, वसु, पितृ, भ्रातृ போன்ற சொற்கள் बुद्धिमत्, श्रीमत्, धीमत्, पशुमत्, वसुमत्, पितृमत्, भ्रातृमत् என்று ஆகின்றன.

श्रीमान्	श्रीमन्तौ	श्रीमन्तः
धीमान्	धीमन्तौ	धीमन्तः
वसुमान्	वसुमन्तौ	वसुमन्तः
पितृमान्	पितृमन्तौ	पितृमन्तः

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்திரீலிங்கத்தில்			நபும்ஸகலிங்கத்தில்		
श्रीमती	श्रीमत्यौ	श्रीमत्यः	श्रीमत्	श्रीमती	श्रीमन्ति
धीमती	धीमत्यौ	धीमत्यः	धीमत्	धीमती	धीमन्ति
वसुमती	वसुमत्यौ	वसुमत्यः	वसुमत्	वसुमती	वसुमन्ति
पितृमती	पितृमत्यौ	पितृमत्यः	पितृमत्	पितृमती	पितृमन्ति

குறிப்பு: भवत् என்ற சொல் भू, भव என்ற தாதுவின் நிகழ்கால வினையெச்சம். இருக்கின்ற என்று பொருள். இதை पचन् पचन्ती पचत् என்பதைப்போல் சொல்ல வேண்டும். भवत् என்ற ஒரு सर्वनामச் சொல்லும் உண்டு. தாங்கள் என்று பொருள். மரியாதையைக் குறிக்கும். அச்சொல் धनवत् சப்தத்தைப்போல் உருவம் பெறுகிறது.

भवान् भवन्तौ भवन्तः (पुंलिङ्ग) தாங்கள்

भवती भवत्यौ भवत्यः (स्त्रीलिंग) தாங்கள்

நபும்ஸகலிங்கத்தில் உபயோகமில்லை.

இந்த वत्-मत् விதிகளுக்குப் பல விதிவிலக்குகள் உண்டு. உதாரணம் यव (நெல் போன்ற தானியம்) என்ற சொல் यवमान् (யவதான்யம் படைத்தவன்) என்றும் लक्ष्मी (செல்வம், அழகு, திருமகள்) என்ற சொல் लक्ष्मीवान् (செல்வமுடையவன், அழகுடையவன், நாராயணன்) என்றும் மாறுதல் அடைகின்றன.

1 வே महान् महान्तौ महान्तः

2 வே महान्तं महान्तौ महतः

3 வே महता महद्भ्यां महद्भिः

மற்ற வேற்றுமைகள் முன்போல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இச்சொல் प्रथमा विभक्ति முழுவதிலும், द्वितीया विभक्ति யின் एकवचन द्विवचन ங்களிலும், महान् महान्तौ என்று நெடிலாக ரூபங்களைப் பெறுகிறது. ஸ்திரீலிங்கத்திலும் நபும்ஸகலிங்கத்திலும் ரூபங்கள் கீழே தரப்படுகின்றன.

1 வே	महती	महत्यो	महत्यः	महत्	महती	महान्ति
2 வே	महतीं	महत्यौ	महतीः	महत्	महती	महान्ति
3 வே	महत्या	महतीभ्यां	महतीभिः	महता	महद्भ्यां	महद्भिः

இவைகளை ஒப்பிட்டுப் பார்ப்போம்

मरुत् —	मरुत्	मरुतौ	मरुतः	मरुतं	मरुतौ	मरुतः
पचत् —	पचन्	पचन्तौ	पचन्तः	पचन्तं	पचन्तौ	पचतः
धीमात् —	धीमान्	धीमन्तौ	धीमन्तः	धीमन्तं	धीमन्तौ	धीमतः
महत् —	महान्	महान्तौ	महान्तः	महान्तं	महान्तौ	महतः

குறிப்பு:

1. मरुत् சப்தம் சாதாரணமானது. पचत् சப்தம் அதில் இருந்து வேறுபடுகிறது. धीमत् சப்தம் पचत् லிருந்து வேறுபடுகின்றது. महत् சப்தம் धीमत् லிருந்து வேறுபடுகின்றது. இவ்வாறு முன்னதைவிட பிந்தையது மேன்மேலும் வேறுபடுவதைக் கவனிக்க வேண்டும்.

2. पचत् धीमत् महत् என்ற சப்தங்கள் விசேஷணச் சொற்கள். எனவே, ஒரே பகுதியிலிருந்து மூன்று லிங்கங்களாலும் ரூபங்கள் ஏற்படுகின்றன. ஸ்திரீலிங்கத்தில் கௌரீ சப்தம் போலவும், நபும்ஸகலிங்கத்தில் ஜகத் சப்தத்தைப் போலவும் ரூபங்களைப் பெறுகின்றன. महत् சப்தம் மட்டும் महान्ति என முதல் வேற்றுமை பன்மையில் ஆகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अनुवादमाला — २६

जलमुचां सङ्घर्षेण विद्युत् उद्भवति। विद्युतां प्रकाशः क्षणिकः। उपन्यासकः मधुरया वाचा जनान् प्रीणयति। द्वौ भिषजौ रोगिणः परीक्षां कुरुतः। दमयन्ती वरणस्रजं नलस्य कण्ठे अर्पयति स्म। छिन्नायाः अंगुलेः असृजः बिन्दवः अपतन्। वृक्षाणां पर्णानि मरुता चलन्ति। मरुतः रूपं नास्ति। स्पर्शेन मरुतं अवगच्छामः। भारतदेशे गङ्गा यमुना गोदावरी इत्यादयः पुण्याः सरितः प्रवहन्ति। गोदावरीसरितः समीपे पञ्चवट्यां रामः सीतया सह अवसत्। बाला सरितः जलमानेतुं गच्छति। ईश्वरः विचित्रं जगत् सृजति। जगति विचित्राः स्थावराः जङ्गमाः जीवाः अजीवाः च सन्ति। अत्र निर्झरस्य पृषन्ति अस्मान् आर्द्रयन्ति। पर्वतं आरोहन्तः जनाः दीर्घं निःश्वसन्ति। बालाः मैदाने धावन्तः उत्पतन्तः हसन्तः कन्दुकं क्षिपन्तः च विहरन्ति। गङ्गोत्तर्याः निर्गच्छन्ती गङ्गा शिखरेभ्यः अवतरन्ती हरिद्वारे समभूमिं प्रविशति। यमुनोत्तर्याः आगच्छन्ती यमुना प्रयागे गङ्गया मिलति। बालाः वृक्षात् पतन्ति जम्बूफलानि सङ्कलयन्ति। भ्रमराः विकसत्सु पुष्पेषु मधु पिबन्ति। अयं बालः धावन्तं कन्दुकं अनुधावति। "इक्ष्वाकुवम्शप्रभवः रामः धृतिमान् बुद्धिमान् नीतिमान् गुणवान् श्रीमान्" इति नारदः अवर्णयत्। इमाः कन्याः गुणवत्यः रूपवत्यः बुद्धिमत्यः च। लोके यत् यत् विभूतिमत् श्रीमत् ऊर्जितं तत् तत् भगवतः अम्शभूतम्। शुद्धिमति सूर्यवम्शे रामः अवातरत्। महतां दर्शनं क्षेमाय। तेषां उपदेशश्रवणमपि क्षेमाय। गिरिः महान्। गिरेः अब्धिः महान्। अब्धेः नभः महत्। नभसः अपि ब्रह्म महत्। ततः अपि आशा महीयसी। महद्भ्यो नमः। महान्तः परहिताय प्राणानपि त्यजन्ति। महता प्रयासेन धनं सम्पादितम्। तञ्जानगरे बृहदीश्वरस्य आलयः महान्। तत्र द्वारे महान् नन्दी वर्तते। अन्तः महतीं लिङ्गस्य आकृतिं पश्यामः।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अनुवादमाला — २७

हर् என்ற தாது பறிக்க என்று பொருள்படும். இந்த தாதுவுடன் உபஸர்க்கங்கள் சேரும்போது பொருள் மாறுபடுவதை 14ம் பாடத்தில் கண்டோம். அதன் தொடர்பில் சில வாக்கியங்கள். இவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கவும்.

तव मम च द्वे नेत्रे द्वौ हस्तौ द्वौ कर्णौ द्वौ पादौ एका नासिका च।

உனக்கும் எனக்கும் இரு கண்கள், இரு கைகள், இரு காதுகள், இரு கால்கள், ஒரு மூக்கு.

वामे हस्ते दक्षिणे हस्ते च पञ्च पञ्च अंगुलयः।

இடதுகையிலும், வலதுகையிலும் ஐந்து ஐந்து விரல்கள்.

अंगुलिषु प्रथमा ह्रस्वा स्थूला च भवति। तस्य अंगुष्ठः इति नाम।

விரல்களில் முதலாவது குட்டையாவும் பருத்ததாகவும் உள்ளது. அதற்கு அங்குஷ்டம் (கட்டைவிரல்) எனப்பெயர்.

द्वितीया तर्जनी नाम। सा दीर्घा।

இரண்டாவது தர்ஜனி (ஆட்காட்டிவிரல்) என்பது. அது நீண்டது.

तृतीया मध्यमा नाम। सा अंगुलिषु मध्यमा, दीर्घतमा च।

மூன்றாவது மத்யமா (நடுவிரல்) என்பது. அது விரல்களில் நடுவானதும், மிக நீண்டதுமாகும்.

चतुर्थी अनामिका नाम। सा तर्जनी इव दीर्घा, परं ईषत् तनुः।

நான்காவது அநாமிகா (மோதிரவிரல்) என்பது. அது தர்ஜனிபோல் நீண்டது. ஆனால் சிறிது மெலிந்தது.

पञ्चमी कनिष्ठिका नाम। सा सर्वाभ्यः अंगुलिभ्यः तनुः ह्रस्वा च।

ஐந்தாவது கனிஷ்டிகா (சுண்டுவிரல்) என்பது. அது எல்லா விரல்களையும் விட மெலிந்தது, குட்டையானதும் கூட.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

वामे पादे दक्षिणे पादे च तथैव पञ्च अंगुलयः।

तासु अपि प्रथमा स्थूला, द्वितीया तृतीया चतुर्थी पञ्चमी च क्रमेण प्रथमां अपेक्ष्य तनवो भवन्ति।

இடது காலிலும், வலது காலிலும் அப்படியே ஐந்து ஐந்து விரல்கள். அவைகளிலும் முதலாவது பருத்தது. இரண்டாவதும் மூன்றாவதும், நான்காவதும், ஐந்தாவதும் வரிசையாக முதலாவதைவிட மெலிந்தவை.

परं हस्तयोः अंगुलीः अपेक्ष्य पादयोः अंगुलयः ह्रस्वाः एव।

ஆனால் கைகளின் விரல்களைப்பார்க்கிலும் கால்களின் விரல்கள் குட்டையே.

ब्रह्मणः चत्वारि मुखानि अष्टौ नेत्राणि, अष्टौ कर्णाः, चतस्रो नासिकाः, द्वौ पादौ, चत्वारः हस्ताः।

பிரும்மாவிற்கு நான்கு முகங்கள், எட்டு கண்கள், எட்டு காதுகள், நான்கு மூக்குகள், இரண்டு கால்கள், நான்கு கைகள்.

सुब्रह्मण्यस्य षट् मुखानि, द्वादश नेत्राणि, द्वादश कर्णाः, षट् नासिकाः, द्वौ पादौ, द्वादश भुजाः च सन्ति।

ஸுப்ரமண்யனுக்கு ஆறு முகங்களும், பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு காதுகளும், ஆறு மூக்குகளும், இரண்டு கால்களும், பன்னிரண்டு கைகளும் இருக்கின்றன.

विनायकः एकेन मुखेन द्वाभ्यां नेत्राभ्यां द्वाभ्यां कर्णाभ्यां पञ्चभिः हस्तैः च विराजते। गजस्य इव तस्य मुखे दीर्घा शुण्डा भवति। सा तस्य पञ्चमः हस्तः।

விநாயகர் ஒரு முகத்துடனும், இரண்டு கண்களுடனும், இரண்டு காதுகளுடனும், ஐந்து கைகளுடனும் விளங்குகிறார். யானைக்குப்போல் அவர் முகத்தில் நீண்ட துதிக்கை உள்ளது. அது அவருக்கு ஐந்தாவது கை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

दिशाः चतस्रः। प्रातः सूर्यं पश्यन् तिष्ठ। तव पुरतः प्राची दिशा। तव दक्षिणे दक्षिणा दिशा। तव पृष्ठे प्रतीची दिशा। तव वामे उदीची दिशा।

திசைகள் நான்கு. காலையில் ஸூரியனைப் பார்த்துக் கொண்டிருப்பவனாக நில். உனக்கு முன் கிழக்கு திசை. உன் வலதுபுறத்தில் தெற்குத் திசை. உன் பின்புறத்தில் மேற்கு திசை. உன் இடதுபுறத்தில் வடக்குதிசை.

भूतानि पञ्च, पृथिवी, जलं, अग्निः, वायुः, आकाश इति।

ஐந்து பூதங்கள், மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என.

मम कुटुंबे वयं अष्टौ भवामः।

என் குடும்பத்தில் நாங்கள் எட்டு பேர்கள் இருக்கிறோம்.

मम पितरौ, सोदरौ, सोदर्यः तिस्रः अहं च।

என் பெற்றோர்களும், இரு சகோதரர்களும், சகோதரிகள் மூவரும், நானும்.

मम सोदरीषु सीता मम अग्रजा, अन्ये द्वे मम अनुजे राधा शान्ता च।

என் சகோதரிகளில் சீதை எனக்கு மூத்தவள், மற்ற இருவரும் எனக்குத் தங்கைகள், ராதாவும் சாந்தாவும்.

मम गेहे चत्वारः अपवरकाः। तत्र प्रथमः विश्रामकक्षः। द्वितीयः पुंसां शयनकक्षः। तृतीयः स्त्रीणां शयनकक्षः। चतुर्थः अपवरकः पाकशाला भवति।

என் வீட்டில் நான்கு அறைகள். முதலாவது ஓய்விடம். இரண்டாவது ஆண்கள் படுக்குமிடம். மூன்றாவது பெண்கள் படுக்குமிடம். நான்காவது சமையலறை ஆகிறது.

विश्रामकक्षस्य द्वे द्वारे। ते वितते। तत्र त्रीणि महान्ति वातायनानि च सन्ति।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓய்விடத்தில் இரண்டு வாசல்கள். அவை அகன்றவை. அங்கு மூன்று பெரிய ஜன்னல்கள் உள்ளன.

எண்கள் (2)

1. ஒவ்வொன்ருக இரண்டிரண்டாக மும்மூன்ருக என்றவாறு அமைக்கப் பயன்படும் அவ்யயச் சொற்கள் இவை

एकशः, द्विशः, त्रिशः, चतुःशः, पञ्चशः, षट्शः, सप्तशः, अष्टशः, नवशः, दशशः என்று எண்ணைக் குறிப்பிடும் சொல்லுடன் शः என்ற அவ்யயம் சேர்த்துச் சொல்கிறோம்.

एतानि फलानि त्रिशः विभज।

இந்தப் பழங்களை மும்மூன்ருகப் பிரித்துக்கொள்.

माणवकाः पञ्चशः समवेताः तिष्ठन्ति।

மாணவர்கள் ஐந்தைந்தாகக் கூடி நிற்கின்றனர்.

2. உள்ளதை கூறுகளாகப் பிரிக்க —

एकधा, द्विधा, त्रिधा, चतुर्धा, पञ्चधा, षोढा, सप्तधा, अष्टधा, नवधा, दशधा என்றவாறு முடிவில் धा சேர்த்து ஒரு வழக்குண்டு. இரண்டு கூருக, மூன்று கூருக, நான்கு கூருகப் பிரித்துக் கூறுவதற்கு இதனைப் பயன்படுத்தலாம் (षट् + धा என்று சேர்க்கும்போது षोढा என்று மாறுதல் அடைவது கவனிக்கத்தக்கது)

फलानि त्रिधा विभज। एकं अस्मै देहि, तत् तस्मै देहि। तृतीयं एतस्मै देहि।

பழங்களை மூன்ருகப் பிரி. ஒன்றை இவனுக்குக் கொடு. அதனை அவனுக்குக் கொடு. மூன்ருவதை இவருக்குக் கொடு.

3. ஒருதடவை இருதடவை மூன்று தடவை என்ற வழக்கில் कृत्वः, वारं என்று முடியும் அவ்யயச் சொற்கள் உண்டு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒருதடவை	एकवारं	सकृत्
இரண்டுதடவை	द्विवारं	द्विः
மூன்றுதடவை	त्रिवारं	त्रिः
நான்குதடவை	चतुर्वारं	चतुः
ஐந்துதடவை	पञ्चवारं	पञ्चकृत्वः
ஆறுதடவை	षड्वारं	षट्कृत्वः
ஏழுதடவை	सप्तवारं	सप्तकृत्वः
எட்டுதடவை	अष्टवारं	अष्टकृत्वः
ஒன்பதுதடவை	नववारं	नवकृत्वः
பத்துதடவை	दशवारं	दशकृत्वः

என்றவாறு 1-2-3-4 எண்களுக்கு एककृत्वः, द्विकृत्वः, त्रिकृत्वः, चतुःकृत्वः என்று சொல்வதற்குப் பதிலாக सकृत्, द्विः, त्रिः, चतुः என்ற வழக்கிருப்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

घटिकाहरः षड्वारं नदति।

கடிகாரம் ஆறுதடவை ஒலிக்கிறது.

रामः त्रिवारं (त्रिः) भुंक्ते।

ராமன் மூன்று தடவை சாப்பிடுகிறான்.

4. சில எண் சொற்கள் தனித்து பொருளையும் குறிப்படும்.

सुमित्रा दशरथस्य द्वितीया द्वितीया।

ஸுமித்ரை தசரதரின் இரண்டாவது மனைவி.

மனைவி கணவனுக்கு மிக நெருங்கியவளானதால் இரண்டாமவள். பிள்ளை முதலானோர் அவளுக்குப் பின்னரே. அதனால் மனைவியை द्वितीया என்றே குறிப்பிடுவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

प्रथमा द्वितीया तृतीया ... . चतुर्दशी पञ्चदशी என திதிகளின் வரிசைக்குப் பெயர். प्रथमा तिथिः, द्वितीया तिथिः என்றவாறு குறிப்பிடுவதற்குப் பதிலாக प्रथमा द्वितीया என்றே சொல்வர்.

शुक्लचतुर्थ्यां विनायकं पूजयन्ति।

சுக்ல (பக்ஷத்து) சதுர்த்தி (திதி)யில் விநாயகரை பூஜிக்கிறார்கள்.

विजयदशम्यां देवीपूजा समाप्तिं गच्छति।

விஜயா என்ற தசமி (திதி)யில் தேவீபூஜை முடிவடைகிறது.

5. शतं सहस्रं என்ற சொற்களுக்கு 100, 1000 என்ற பொருளிருந்தாலும் அளவிலடங்காதவற்றையும் குறிப்பிட (நூற்றுக் கணக்கானவர் ஆயிரக்கணக்கானவர் என்ற பொருளிலும்) இவற்றை வழங்குவர். ஆயிரம்பேர் கூடினர் என்றால் 999ஓ 1001ஓ அல்ல என்ற பொருளில்லை அல்லவா.

शरदः शतं जीव।

நூறாண்டுகள் வாழ்வாய்!

सहस्रं समाः गताः अशोकस्य शासनात्परम्।

அசோகரின் ஆட்சிக்குப் பிறகு ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன.

अनुबन्धः प्रथमः - அனுபந்தம் 1

भाषणे संस्कृतम् (१)

जात! शयनात् उत्थितो वा।

குழந்தாய்! படுக்கையிலிருந்து எழுந்துவிட்டாயா?

आं मातः! इतः एषः आगच्छामि।

ஆம் அம்மா! இதோ வருகிறேன்

दन्ताः शोधिता वा? (दन्तान् अशोधयः किम्?)

பற்கள் தேய்க்கப்பட்டனவா? (பற்களைத்தேய்த்தாயா?)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

दन्तलेपिन्या अधुनैव शोधितवान् अस्मि। (अशोधयम्)

பற்பசையால் இப்போதுதான் சுத்தப்படுத்தினேன்.

मुखं क्षालितं वा? तर्हि आगच्छ, क्षीरं सशर्करं सज्जम्। पिब। अन्यथा तत् शीतं भवेत्।

முகம் அலம்பப்பட்டதா? அப்படியானால் வா. பால் சர்க்கரையுடன் தயாராக உள்ளது. குடி. இல்லாவிடில் அது ஆறிவிடும்.

मात ः ! क्षीरं अद्य मास्तु। काफीं पिबामि।

அம்மா! பால் இன்றுவேண்டாம். காபியைக்குடிக்கிறேன்.

अस्तु। काफीं स्वीकुरु। शीघ्रं स्नाहि।

ஆகட்டும், காபியை எடுத்துக்கொள். சீக்கிரம் குளி

मातः ! रामः त्वरते। स एव प्रथमं स्नानं करोतु। (स्नातु)

அம்மா, ராமன் அவசரப்படுகிறான். அவனே முதலில் குளிக்கட்டும்.

त्वमपि शीघ्रं स्नाहि। पठनाय विलंबः भवति। अस्तु, कञ्चुकं आप्रपदीनं अन्यत् सर्वं सज्जं वा?

நீயும் சீக்கிரம் குளி. படிக்கத்தாமதம் ஆகிறது. சரி, சட்டை கால்சராய் மற்றது அனைத்தும் தயாரா?

सर्वं पूर्वेद्युः रात्रावेव अहं सज्जं कृतवान्।

எல்லாவற்றையும் நேற்று இரவிலேயே நான் தயாராக்கியுள்ளேன்.

अधोरुकं, अन्तर्युतकं च फेनशोधिन्या लिप्ते। कृपया ते क्षालय, शोषय, तापेन निर्वलीकं कुरु।

அரைக்கால் சராயும், பனியனும் சோப்பு தடவப்பட்டுள்ளன. தயை செய்து அவற்றை (இரண்டையும்) அலசிவிடு. உலர்த்து. சூட்டால் சுருக்கமில்லாமல் செய் (அயர்ன் செய்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

सायं क्रीडाकाले ते उपयोज्ये।

மாலை விளையாட்டுவேளையில் அவை இரண்டும் பயன்படத்தக்கவை.

अंब, समयः अत्येति। अनुमन्यस्व। विद्याशालां गच्छामि।

அம்மா நேரம் கழிகிறது. அனுமதிப்பாய், பள்ளிக்கு செல்கிறேன்.

समयोऽस्ति। मा त्वरस्व। गमने आगमने च जागरूको भव।

நேரம் உள்ளது. அவசரப்படாதே. போவதிலும் வருவதிலும் கவனமுள்ளவனாக இரு.

स्वस्ति गच्छामि।

நல்லது. செல்கிறேன்.

वत्स! सायं विद्याशालातः साक्षात् इह आगच्छ। मध्ये मा विलंबं कुरु।

குழந்தாய், மாலை பள்ளிக்கூடத்திலிருந்து நேரே இங்கேவா. நடுவில் தாமதம் செய்யாதே.

सायमाशं सज्जं करोमि। तत् भुक्त्वा अनन्तरं क्रीडायै गच्छ।

மாலை உணவைத் தயாராகச் செய்கிறேன். அதனைச் சாப்பிட்டுவிட்டுப் பிறகு விளையாடச்செல்.

मध्याह्ने अनुजं पश्य।

மதியம் தம்பியைப் பார்.

तस्य हस्ते लघ्वशः दत्तः। पानाय नीरमपि दत्तम्। स भोक्तुम् न जानाति। उपकुरु।

அவன்கையில் சிற்றுண்டி கொடுக்கப்பட்டுள்ளது. குடிக்க ஜலமும் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் சாப்பிட அறிய மாட்டான். உதவிசெய்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

भाषणे संस्कृतम् (२)

தமிழில் மொழிபெயர்க்கவும்.

– किं तव नाम?
– मम नाम माधवः।
– किं तव पितुः नाम?
– विश्वेश्वरः इति तं कथयन्ति।
– किं तव जन्मस्थानम्? कुत्र तत् वर्तते?
– श्रीरङ्गं मे जन्मभूमिः। त्रिशिरःपुरस्य समीपे तत् वर्तते।
– तव गृहे के के सन्ति? भ्राता भगिनी च विद्येते वा?
– मम गृहे माता पिता, त्रयः भ्रातरः, एका अविवाहिता अग्रजा च विद्यन्ते। भ्रातृषु एकः ज्येष्ठः विवाहितः।
– किं तव वयः?
– मम वयः चतुर्दश वत्सराः। विजयदशमीतः पञ्चदशे वयसि पदं निदधामि।
– कुत्र ते वासः?
– त्रिशिरःपुरे आण्डार् वीथ्याम्।
– कस्मिन् विद्यालये पठसि? कस्यां कक्ष्यायाम्?
– विजयाविद्यालये पठामि। नवम्यां कक्ष्यायाम्।
– ज्येष्ठो भ्राता विवाहितः इति अवदः किल? किं सः उद्युक्तः? कुत्र?
– विवाहितो ज्येष्ठः टङ्कनकलां अध्यापयति, अस्माकं गृहे एव।
– तव कक्ष्यायां कति माणवकाः पठन्ति?
– कक्ष्यायां अ वर्गे पठामि। तत्रापि उपशतं माणवकाः पठन्ति।
– प्रतिवर्गं शतं माणवका वा? कुतः ईदृशः सञ्जातः ?
– अद्यत्वे पिपठिषवः बहवः। विद्याशालाः संख्यायां न्यूनाः। कथमपि सर्वे प्रवेशं वाञ्छन्ति। तथा प्रयतनं कुर्वन्ति, यथा अधिकृताः न तान् उपेक्षेरन्।
– अस्तु। पाठनं सम्यक् प्रचलति वा?

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

– प्रचलति। अध्यापकाः यथायथं श्राम्यन्ति। तथापि एकैकोऽपि माणवः बोधितंः सम्यक् अवधारयति वा इति परीक्षितुं अध्यापकस्य न अवकाशः।

– श्रम एव। एषा स्थितिः भूयसां विद्याशालानां उद्घाटनेन कदाचित् अपगच्छेत्।

– विद्याशालाः अधिका कल्पनीयाः। अध्यापकाः अपि अधिकतया नियोक्तव्याः। तथा सर्वकारः प्रयतेत इति आशंसे।

– अस्तु। पुनः पश्यामि। पितरं मदर्थे अभिवादय।

नाम பெயர் कथयन्ति கூறுகிறார்கள் जन्मस्थानं பிறந்த இடம் भगिनी சகோதரி अविवाहिता மணமாகாதவள் अग्रजा முன்பிறந்தவள், அக்கா विवाहिता மணமானவள் वत्सराः ஆண்டுகள் पदं निदधामि காலடி வைக்கிறேன் कक्ष्या வகுப்பு वर्गः பிரிவு उद्युक्तः உத்தியோகத்தில் உள்ளவன் टङ्कनकला தட்டெழுத்துக்கலை, டைப்ரைடிங் अध्यापयति கற்றுக் கொடுக்கிறான் उपशतं கிட்டத்தட்ட 100 प्रतिवर्गं ஒவ்வொரு பிரிவிலும் संघातः நெருக்கடி पिपठिषवः படிக்க விரும்புபவர்கள் संख्यायां எண்ணிக்கையில் न्यूनाः குறைந்தவை प्रवेशः நுழைவு அட்மிஷன் वाञ्छन्ति விரும்புகிறார்கள் प्रयतनं முயற்சியை अधिकृताः அதிகாரிகள் न उपेक्षेरन् கவனக்குறைவுடன் இருக்கமாட்டார்கள் पाठनं கற்பித்தல் यथायथं எப்படி நடக்கவேண்டுமோ அப்படி श्राम्यन्ति உழைக்கிறார்கள், சிரமப்படுகிறார்கள் बोधितं கற்பிக்கப்பட்டதை अवधारयति புரிந்துகொள்கிறான் परीक्षितुं சோதித்துப்பார்க்க अवकाशः நேரம் - வாய்ப்பு भूयसां எண்ணிக்கையில் அதிகமாயுள்ள उद्घाटनं திறப்பு अपगच्छेत् விலகும் नियोक्तव्याः பதவியில் அமர்த்தப்பட வேண்டும் सर्वकारः அரசாங்கம் प्रयतेत முயலும் आशंसे எதிர்பார்க்கிறேன் मदर्थे என்சார்பில் अभिवादय வணக்கத்தை தெரிவித்துக்கொள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

भाषणे संस्कृतम् (३)

தமிழில் மொழிபெயர்க்கவும்

- अये वयस्य ! सुदिनम् !
- सुदिनं मित्र !
- क्रीडाक्षेत्रात् आगच्छसि वा?
- आम्। कथं त्वया ज्ञातम्?
- धूलीभिः धूसरितं ते मुखम्। श्रान्तः असि।
- आम्। अद्य द्वे होरे यावत् मया क्रीडितम्। तत्रापि शिवय कन्दुकक्रीडा सञ्चालिता। अनारतं धावनेन ईषत् श्रान्तः अस्मि।
- त्वं प्रतिदिनं एवं खेलसि वा?
- न न। विरामदिनेषु एवं क्रीडामि।
- सायं आशः स्वीकृतो वा?
- विद्याशालातः गृहं गतवान्। तत्र सायमाशः सज्जः अभवत्। तं खादित्वा क्रीडांगणं अगच्छम्।
- अस्तु। कदा ते पठनाय अवकाशः?
- सायं सप्तवादनात् नववादन पर्यन्तं, प्रत्यूषे पञ्चवादनात् सप्तवादनपर्यन्तं पठामि। पठनाय पर्याप्तः अवकाशः।
- कदा शयनं भजसे?
- रात्रौ नववादनतः प्रत्यूषे पञ्चवादनं यावत् स्वपिमि। प्रत्यूषे एव मे माता मां जागरयति। दन्तान् संशोध्य मुखं क्षालयित्वा देवं प्रणमामि। ततः पठनं करोमि।
- नियते काले पठसि। उचिते समये शयनाय गच्छसि। प्रत्यूषे एव शयनात् उत्थितः भवसि। श्लाघनीया ते दिनचर्या।
- श्रान्तः अस्मि। गृहं गच्छामि। आपृच्छे पुनः दर्शनाय।

क्रीडाक्षेत्रं, क्रीडाङ्गणं விளையாடுமிடம் धूलीभिः धूसरितं தூசிகளால் நிறம்மங்கிய श्रान्तः களைத்தவனாக होरा மணி क्रीडितं

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விளையாடப்பட்டது शिक्यकन्दुकक्रीडा கூடைப்பந்தாட்டம் सञ्चालिता நடத்தப்பட்டது अनारतं ஓய்வின்றி धावनं ஓடுதல் विरामः ஓய்வு सायमाशः மாலை உணவு सप्तवादनात् ஏழு அடித்ததிலிருந்து, ஏழுமணியிலிருந்து वादनं (கடிகாரத்தில் மணி) அடித்தல் प्रत्यूषे விடியற்காலையில் पर्याप्तः போது மானது भजसे அடைகிறாய் जागरयति எழுப்புகிறாள் क्षालयित्वा அலம்பிவிட்டு नियते குறிப்பிட்ட उचिते தக்கதான उत्थितः எழுந்திருந்தவனாக श्लाघनीया பாராட்டத்தக்கது दिनचर्या அன்றாட நடவடிக்கை आपृच्छे சொல்லிக்கொள்கிறேன்.

भाषणे संस्कृतम् (४)

प्रातः कालः। घटिकाहरः षड्वारं नदित्वा शान्तः। बालाः एतावता शयनीयेषु सुखं स्वपन्ति। माता ताम् उत्थापयति।

காலைவேளை. கடிகாரம் ஆறுதடவை ஒலித்து ஓய்ந்துள்ளது. சிறுவர்கள் இதுவரை படுக்கைகளில் சுகமாகத் தூங்குகின்றனர். தாயார் அவர்களை எழுப்புகிறாள்.

– राम ! उत्तिष्ठ।

ராமா எழுந்திரு.

– मातः - एषः उत्थितः अस्मि।

அம்மா இதோ எழுந்துவிட்டேன்

– रमे जागृहि। शयनात् अपसर। कालो गच्छति।

ரமா! எழுந்திரு. படுக்கையை விட்டு அகன்றுசெல். நேரம் போகிறது.

– अंब ! उत्थिता अहम्। क्षणं क्षमस्व।

அம்மா எழுந்துவிட்டேன் நான். சிறிது (ஒருநொடி) பொறுத்துக்கொள்.

– कृष्ण ! एतावता न उत्थितः असि। नेत्रे उन्मीलय। कालः अतीतः।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கிருஷ்ணு! இன்னம் எழுந்திருக்கவில்லையா! கண்களைத்திற. நேரம் ஆயிற்று.

– अंब। अहं स्वपिमि (निद्रामि)। उपरोधं मा कुरु।

அம்மா! நான் தூங்குகிறேன். தொந்தரவுசெய்யாதே.

– अरे! निद्रामि इति वदसि। अथापि भाषसे। मिथ्यैव किल?

ஏண்டா! தூங்குகிறேன் என்று சொல்கிருய். ஆனுலும் பேசுகிருயே? பொய்தானே?

– अंब! दयां कुरु। अपसर! मां निद्रातुं अनुमन्यस्व।

அம்மா! தயை செய். அகன்று செல். என்னை தூங்கவிடு.

– अरे अलस! मृषा नेत्रे मीलयन् असि। निमीलय। अन्यथा पितरं आह्वयेयम्।

ஏய் சோம்பேறி! சும்மா கண்களை மூடிக் கொண்டிருக்கிருய். (கண்களை) திற. இல்லாவிடில் அப்பாவைக் கூப்பிடுவேன்.

– अस्तु। पिता मां ताडयेत् इति भीषयसि। उत्थितः किं करिष्यामि?

இருக்கட்டும். அப்பா என்னை அடிப்பார் என்று பயமுறுத்துகிருய். எழுந்தவன் என்ன செய்யப்போகிறேன்.

– प्रातः काले शयनं दोषाय। उत्तिष्ठ।

காலை நேரத்தில் படுத்திருப்பது கெடுதலுக்கு (ஆகும்) எழுந்திரு.

– अरे राम! शयनीयानि उपधानानि तथैव सन्ति वा? सर्वं तत् तत् तस्मिन् तस्मिन् स्थाने निवेशनीयम्। अरे तथा मा कुरु। तत् उपधानं आस्तरणे आवेष्ट्य परिष्कृत्य शयनीयस्थाने निधेहि।

ஏய் ராமா! படுக்கைகளும், தலையணைகளும் அப்படியே இருக்கின்றனவா? எல்லாம் அதது அந்தந்த இடத்தில் வைக்கப்படவேண்டும். ஏய்! அப்படி செய்யாதே! அந்தத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தலையணையை விரிப்பால் சுற்றி சீர்செய்து படுக்கை வைக்குமிடத்தில் வை.

— शयनात् उत्थापनाय इयान् कोलाहलो वा?

படுக்கையிலிருந்து எழுப்ப இத்தனை தடபுடலா?

— कदा वा स्वयमेव तत् तत् तदा तदा ज्ञास्यथ।

எப்போதுதான் தானேயே அதை அவ்வப்போது செய்ய அறிந்து கொள்ளப்போகிறீர்கள்?

— मातः ! मा कुप्य। सर्वं सम्यक् निहितम्। न किञ्चन विकीर्णम्।

அம்மா கோபித்துக்கொள்ளாதே. எல்லாம் நன்கு வைக்கப்பட்டுள்ளன. ஒன்றும் வாரியிறைக்கப்படவில்லை.

भाषणे संस्कृतम् (५)

— आगच्छन्तु। शौचागारे शौचं कुर्वन्तु। दन्तान् सम्यक् धावयन्तु। दन्तधावने न त्वरा कार्या। दन्तचूर्णं अत्र विद्यते। पिष्टी तु तत्र अस्ति। यावत् अपेक्षितं तावत् आदेयम्। किमपि न वृथा करणीयम्।

வாருங்கள். கழிப்பறையில் மலசுத்தி செய்து கொள்ளுங்கள். பற்களை நன்கு தேயுங்கள். பல்தேய்ப்பதில் அவசரம் கூடாது. பற்பொடி இங்கே உள்ளது. பசை அங்கே உள்ளது. எவ்வளவு தேவையோ அவ்வளவு எடுத்துக் கொள்ளவேண்டும். ஒன்றையும் வீணாக்கக்கூடாது.

— दन्ताः शोधिता वा! कूर्चिकाः सम्यक् प्रक्षालयत। मुखं जलेन आपूर्य गण्डूषं कुरुत। जिह्वां अंगुलीभिः निर्लिखत। अन्यथा आस्यात् दुर्गन्धः न अपेयात्।

பற்கள் அலம்பப்பட்டனவா? பிரஷ்களை நன்கு அலம்புங்கள். வாயை நீரால் நிரப்பிக் கொப்புளியுங்கள். நாக்கை விரல்களால் தேய்த்து வழியுங்கள். இல்லாவிடில் வாயிலிருந்து கெட்டமணம் அகலாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

– (प्रातः कालः। सप्तमी होरा। माता शयनात् उत्थितेभ्यः बालकेभ्यः प्रातःपानीयं ददाति। विद्यालयगमनाय तान् क्रमेण सज्जीकरोति।)

காலை ஏழு மணி: தாயார் படுக்கையிலிருந்து எழுந்த சிறுவர்களுக்கு காலை பானத்தை தருகிறாள். பள்ளிக் கூடம்செல்ல அவர்களை முறைப்படி தயாராக்குகிறாள்.

– वत्साः ! दन्ताः धाविताः वा? मुखं क्षालितं वा?

குழந்தைகளே! பற்கள் தேய்க்கப்பட்டனவா? முகம் அலம்பப்பட்டதா?

– काफी, क्षीरं यूषः इति पेयं सज्जम्। पिबत यथाकामम्।

காபி, பால், கஞ்சி என்று பானம் தயார். விருப்பப்படி சாப்பிடுங்கள்.

– मातः ! मह्यं एतत् त्रयमपि न रोचते। क्षीरे बोर्नविटां विलाप्य देहि।

அம்மா! எனக்கு இந்த மூன்றும் பிடிக்கவில்லை. பாலில் போர்ன்விடாவைக் கலந்து கொடு.

– अस्तु। ददामि। एतत् रोचते, तत् न रोचते इति न वक्तव्यम्। यत् अस्ति तत् पेयम्। वयं न धनिनः। आयः मितः। अतः व्यये अवहिता भवेम। अद्य तत् अस्ति। ददामि। यदा न अस्ति सदा न शोकः कार्यः। अवधत्से वा?

ஆகட்டும். தருகிறேன். இது பிடிக்கிறது, இது பிடிக்க வில்லை என்று சொல்லக் கூடாது. எது இருக்கிறதோ அது குடிக்கத்தக்கது. நாம் பணக்காரர்கள் அல்ல. வரவு அளவுக்குள்ளானது. அதனால் செலவில் கவனத்துடன் இருப்போம். இன்று அது உள்ளது. தருகிறேன். எப்போது இல்லையோ அப்போது வருத்தம் கூடாது. புரிந்து கொண்டாயா?

– अंब ! क्षमस्व। क्षीरमेव पिबामि। न मे कोपः तापो वा।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அம்மா மன்னித்துக்கொள். (பொறுத்துக்கொள்) பாலையே குடிக்கிறேன். எனக்கு கோபமோ தாபமோ இல்லை.

– (पिता गृहात् बहिः वेदिकायां उपविश्य वार्तापत्रिकां पठन् आस्ते। गृहस्य अन्तः संपद्यमानं सल्लापं शृणोति। मन्दं हसति।)

(தந்தை வீட்டின் வெளியே திண்ணையில் உட்கார்ந்து செய்தித்தாளைப் படித்துக்கொண்டிருக்கிறார். வீட்டினுள் நடக்கின்ற பேச்சுவார்த்தையைக் கேட்கிறார். மெள்ளச் சிரிக்கிறார்.)

– राम! पितरं निवेदय। क्षीरपोटली न आगता। कुतः एवं इति विचारयतु।

ராமா! அப்பாவிடம் சொல். பால் பொட்டணம் வரவில்லை. ஏன் இப்படி என்று விசாரிக்கட்டும்.

– अम्ब! पिता वदति। पोटलीवितरकः अद्य विरामं अनुभवति। वयमेव क्षीरवितरणिकां गत्वा साक्षात् आदातुं अर्हामः।

அம்மா! அப்பா சொல்கிறார். பொட்டணம் விநியோகிப்பவர் இன்று ஓய்வில் உள்ளார். நாமே பால் டெபோ விற்குப் போய் நேரே பெற்றுக்கொள்ள வேண்டும்.

(पिता क्षीरवितरणिकां गत्वा क्षीरपोटलीं आनयति।)

(அப்பா பால் டெபோவிற்குச் சென்று பால் பொட்டணத்தைக் கொணர்கிறார்.)

– अये! मह्यं काफी सज्जा वा?

ஏய்! எனக்கு காபி தயாரா?

– क्षणं प्रतीक्षताम्। काफीफाण्टाय चूर्णं इदानीमेव चालिन्यां निहितं, उष्णोदकं च दत्तम्। पञ्चभिः दशभिः निमेषैः फाण्टः सज्जः भवेत्। पूर्वं संहितः फाण्टः अवसितः।

சிறிது (ஒரு நொடி) பொறுத்துக்கொள்ளுங்கள். காபிடிகாக்ஷனிற்காக பொடி இப்போதுதான் வடிக்கட்டியில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போடப்பட்டுள்ளது. வென்னீர் ஊற்றப்பட்டுள்ளது. 5-10 நிமிடங்களில் டிகாக்ஷன் தயாராகிவிடும். முன்தயாரித்த டிகாக்ஷன் ஆகிவிட்டது.

– वत्साः ! स्नानं कुरुत। स्नानात् पूर्वं केशान् ईषत् तैलेन अभिमृशत। ततः स्नात। उष्णं उदकं सज्जम्। शीतं उदकं नलस्य अधः पाल्यां सज्जम्। एकैकशः स्नानशालां गच्छत।

குழந்தைகளே! ஸ்நானம் செய்யுங்கள். குளியலுக்கு முன் கேசங்களில் கொஞ்சம் எண்ணெய் தடவுங்கள். பிறகு குளியுங்கள். வென்னீர் தயார். குளிர்ந்த நீர் குழாயினடியில் வாளியில் தயார். ஒவ்வொருவராக குளியலறைக்குச் செல்லுங்கள்.

– अये! भवानपि स्नानाय सज्जः भवतु। मास्तु कालातिपातः। कार्यालयाय प्रस्थानकाले संरंभः मास्तु। भोजने त्वरा मास्तु।

ஓய்! நீங்களும் ஸ்நானத்திற்குத் தயாராகுங்கள். நேரத்தை தள்ளிப் போடுதல் வேண்டாம். காரியாலயத்திற்கு செல்லும்போது பரபரப்பு வேண்டாம். சாப்பாட்டில் அவசரம் வேண்டாம்.

अनुबन्धः द्वितीयः

அனுபந்தம்-2

ஒவ்வொரு மொழியும் அதற்கென்றமைந்த சில இலக்கண முறைகளைப் பின்பற்றுகிறது. ஸம்ஸ்கிருதமும் அவ்வாறே சில முறைகளைப் பின்பற்றுகின்றது. சில வேறுபாடுகள் கவனத்திற்கு உரியவை.

1. புல்லிங்கம், ஸ்திரீலிங்கம், நபும்ஸகலிங்கம் என்பவை பொதுவாக ஆண்பால், பெண்பால், அஃறிணை இவற்றைக் குறிப்பிட்டாலும் பல சொற்கள் இந்தக்கட்டில் அடங்காதவை. **मित्र** நபும்ஸகலிங்கச் சொல். நண்பன், நண்பி என்று ஆண் பெண் இருவரையும் குறிக்கும். **मित्रः** என்ற ஆண்பால் சொல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உண்டு. அது ஸூர்யனை மட்டும் குறிக்கும். நண்பனை அல்ல. वृक्षः புல்லிங்கம், लता ஸ்திரீலிங்கம், ஆனால் அஃறிணையில் குறிப்பிடப்பெறும் மரத்தையும், கொடியையும் குறிக்கும். वृक्षं लतं என்று எழுத முடியாது. அதனால் முதலில் கற்கும் போதே இந்தச்சொல் எந்த லிங்கத்தில் வந்துள்ளது என்பதை நினைவில் பதித்துக்கொள்வது அவசியம்.

2. ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் வேற்றுமை உருபுகள் தனித்து உள்ளன. அதனால் பெயர்ச்சொல்லுடன் இணைப்பது எளிது. राम से, राम ने, राम को, राम के लिए. With Rama, by Rama, to Rama, for Rama. ஆனால் , தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலும் அவை பெயர்ச்சொல்லுடன் இணைந்தே பயன்படுத்தப்படுகின்றன. இணைக்கும்போது பெயர்ச் சொல்லிலும் வேற்றுமை உருபிலும் மாறுதல் ஏற்படுகின்றது. ராமனை, அவற்றை, ராமனுக்காக - அவற்றிற்காக रामं, विद्वांसं, रामाय, हरये, मधुने அதனால் முதலிலேயே ஏழு வேற்றுமைகளிலும் ஒருசொல் அடையும் மாறுபாடுகளைக் கற்கவேண்டி வருகிறது.

3. வினைச்சொற்களுக்கு ஆண்பால் பெண்பால் மாறுபாடு இல்லை. सः करोति, सा करोति, तत् करोति। செய்கிறான், செய்கிறாள், செய்கிறது என்பதுபோல் பால் மாறுபாட்டமில்லை. ஹிந்தியில் உத்தமபுருஷனிலும் (தன்னிலை). மத்யம புருஷனிலும் (முன்னிலை) பால்மாறுபாட்டம் உண்டு. तुम करती, हो, मैं करती हूँ, वह करता है என்று வரும். ஸம்ஸ்கிருதத்தில் அங்கும் மாறுபாடு கிடையாது. (ஸம்ஸ்கிருதம் பயிலுபவர்களில் சிலர் ஹிந்தி கற்றவர்கள். அவர்கள் இந்த மாறுபாட்டை மனதில் பதித்துக் கொள்வது அவசியம்)

மொழிப்பயிற்சியைத் தொடங்கும் போதே இந்த மாறுபாடுகளைக் கவனித்து மனதில் வாங்கிக்கொண்டால் பயிற்சி எளிதாக அமையும். பேசும்போது தவறுகள் நேர்ந்தால் பொருட்படுத்தமாட்டார்கள். எழுதும்போது தவறு நேர்ந்தால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சற்று உறுத்தும். அதனுல் படித்துப் பழகுவதைப்போல் எழுதிப்பழகுவதும் அவசியமே.

अभ्यासः प्रथमः — பயிற்சி - 1

तमिलपदानि संस्कृतीकुरुत।

त्वं பந்திற்காக स्पृहयसि। (மாதிரி कन्दुकाय)

माता பெண்ணிற்கு फलं यच्छति।

உனக்கு एततु फलं रोचते किम्?

பசுமாடு புல்லுக்காக इतस्ततः चरति।

माणवकः பள்ளிக்கூடத்திலிருந்து क्रीडांगणं गच्छति।

आचार्यः காவேரி ஆற்றில் स्नानं करोति।

एतावत् पठनेन போதும்.

गुरो! உங்களை வணங்குகிறேன்.

गजाः கரும்புத்துண்டங்களை खादन्ति।

करयोः பத்து விரல்கள் सन्ति।

अभ्यासः द्वितीयः — பயிற்சி - 2

उचितान् क्रियाशब्दान् योजयत।

कृष्णाय नवनीतं — (மாதிரி रोचते)

ग्रामात् अहं —

रामुः संस्कृते भाषणं —

विद्यया विनयः —

अहं सिंहात् —

तृषितः जलं —

कृष्णः नद्यां —

नदीनां जलं रुचिरं —

रामः चक्षुर्भ्यां —

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अभ्यासः तृतीयः — பயிற்சி - 3

नखरेखामध्ये दत्तं क्रियापदं उचितेन पुरुषवचनेन योजयत।
நகக்குறியிடையே கொடுக்கப்பட்டுள்ள வினைச்சொற்களைத் தக்க புருஷவசனங்களுடன் இணைத்து எழுதுக.

गुरुः अद्य द्वितीयं पाठं (बोध) (மாதிரி बोधयति)
अहं प्रतिदिनं मातरं (नम)। त्वं वने (विहर)।
अद्य रामभागवतः गानमन्दिरे (गा)
अश्वः प्रयाणाय सज्जः (भव)
त्वं मोदकाय (स्पृह)। अहं रामाय (कुप्)।
मम वृथा विवादः न (रोच)
हरिश्चन्द्रः असत्यवचनात् (जुगुप्)
वने मृगाः भयं विना (चर)

अभ्यासः चतुर्थः — பயிற்சி - 4

1. दत्तानि क्रियापदानि योजयित्वा वाक्यानि रचयत।
   चरति, आगच्छति, आनयसि, आहरामि, वदति, अवतरति, भाषते, लिहसि, प्रभवति, नमामि

2. तमिलभाषायां अर्थं ब्रूत।
   अध्यापकः, गुरौ, पत्रात्, कदाचित्, तृषितस्य, स्वसा, जनकेन, लेखिन्या, अश्वेभ्यः, प्रायः

3. संस्कृते अनुवदत।
   பூந்தோட்டம், நாவல்பழம், பேருந்து, இருகாதுகளால் பிடிக்கவில்லை, மயில், எங்களிடமிருந்து, கோபிக்கிறாய், உனக்கு அவனிடம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अभ्यासः पञ्चमः - பயிற்சி 5

अधः दत्तानां शब्दानां निर्दिष्टासु विभक्तिषु रूपाणि दत्त। तमिलि अर्थं च लिखत।

கீழே தந்துள்ள சொற்களுக்குக் குறிப்பட்ட விபக்திகளில் ரூபங்களைத்தந்து பொருள் எழுதுக.

युष्मत् (त्वं) चतुर्थी, गौरी-पञ्चमी, रमा-तृतीया, वारि-चतुर्थी, उदकं-षष्ठी, आकाशः-सप्तमी, प्रजा-चतुर्थी, धनं-द्वितीया, मृत्तिका-तृतीया, विद्या-पञ्चमी।

अभ्यासः षष्ठः - பயிற்சி 6

अधः दत्तेषु वाक्येषु कानिचन पदानि नखरेखामध्ये भवन्ति। तानि उचितायां विभक्तौ लिखत।

கீழே கொடுக்கப்பெற்ற வாக்கியங்களில் சில சொற்கள் நகக்குறி இடையே உள்ளன. அவற்றை தக்க விபக்தியில் எழுதுக.

अहं प्रातः (सूर्य) वन्दे।
नृपतिः युद्धे (शत्रु) जयति।
मम शिक्षकः (अस्मत्) व्यायामं बोधयति।
बालकः दन्तैः (शष्कुली) खादति।
बिडालः (मूषक) अनुधावति।
(गिरि) निकषा नदी प्रवहति।
माता (वाम) हस्तेन बालं आलिङ्गति।
(दुष्ट) बालं गुरुः शिक्षयति।
(राम) विना लक्ष्मणः कदापि न गच्छति।
गोपालः धेनुं (दण्ड) ताडयति।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अभ्यासः सप्तमः – பயிற்சி 7

संस्कृते अनुवदत।

கோபம் ஆசையிலிருந்து உண்டாகிறது
நான் உப்பரிகையிலிருந்து வீதியைப் பார்க்கிறேன்
பிறரைத் துன்புறுத்துவது பாபத்திற்கு ஆகிறது
நான் தாயையும் தந்தையையும் வணங்குகிறேன்
மாணவர்களுக்குத் தருவதற்காகப் பழங்களை வாங்குகிறேன்.
உன் முன் அந்தப் புத்தகம் உள்ளது
நீ எதற்காக இப்படி வருந்துகிறாய்?
வேகமாக ஓடாதே.
தேசத்தின்பொருட்டு மஹாத்மாகாந்தி எல்லாவற்றையும் துறந்தார்.
மனிதர்களில் பாரதீ உயர்ந்தவர்.

अभ्यासः अष्टमः – பயிற்சி 8

तमिलि अनुवदत।

आर्य! स्वागतम्। उपविशतु भवान्।
अहं पचने निपुणा भवामि।
कपिः वेगेन उत्पतति।
उद्यमेन सर्वे अर्थाः सिध्यन्ति।
मृगाः मृगैः सह चरन्ति, एवं नराः नरैः सह चरन्ति।
धेनोः दुग्धं स्वादु, अतः बाल! शीघ्रं पिब।
आचार्य! वयं चत्वारः गणितं पठामः, भवान् सम्यक् बोधयतु।
धर्मस्य हेतोः रामः वनं अगच्छत्। सीता अपि तं अन्वगच्छत्।
पत्रप्रेषालयस्य पुरतः मम गृहं अस्ति।

तमिलि पदानां अर्थं वदत।

मानवेन, अस्मभ्यं, क्षुधया, अतिपरिचयः, वित्तागारः, खाद्यं, उपरिष्टात्, रक्षागारः, तरणिः, आविलं, सङ्गच्छते, निरामयं,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

सन्ध्यायां, दुह्यमानासु, आसन्ना, अत्यर्घं, आसक्ता, धूर्ततमः, कीलकं, मधुरतमम्।

संस्कृते अनुवदत।

மலரும்போது, கெடுதிவிளைவிப்பவர்களால், பந்து விளையாட்டில், காட்டுவிலங்குகள், விளையாட்டுவீரன், பாராட்டு, உனக்கு முன்னர், வேலைக்காரன், உப்பரிகை, கோபிக்கிறான், விலைக்கு வாங்குகிறான், உளுந்து, மக்கள், கொடை, துறவி, சூதாடி, தட்டான், கடைக்காரன், சேணியன், நாக்கு.

अभ्यासः नवमः – பயிற்சி 9

अधो निर्दिष्टैः ऋकारान्तैः पदैः अन्वितानि वाक्यानि रचयत?

கீழ்கண்ட ऋकारान्त சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைத்துப் பொருள் கூறவும்.

पितरं, मातृभिः, स्वस्रे, दुहित्रा, नेतारं, दातारं, याचितारः, उपदेष्टा (உபதேசம் செய்பவன்) विद्यादात्रे, भर्तुः

अभ्यासः दशमः – பயிற்சி 10

अधो निर्दिष्टेषु वाक्येषु अपूर्णान् नखरेखामध्यगतान् पदान् उचितया विभक्त्या उचितेन वचनेन च योजयत।

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியங்களில் நகக்குறியின் நடுவில் உள்ள நிறைவுறாத சொற்களைத் தக்க விபக்தி வசனங்களுடன் சேர்க்கவும்.

अहं (पितृ) आज्ञया ग्रामं अगच्छम्।

(दातृ) याचकाः उपगच्छन्ति।

वत्सः (मातृ) अन्वधावत्।

कृष्णस्य (स्वसृ) सुभद्रां अर्जुनः पर्यणयत्।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

जनैः निर्वाचिताः अद्यत्वे देशस्य (शास्तृ) भवन्ति।
रामेण सहितः सुग्रीवः (भ्रातृ) वालिनं युद्धाय आह्वयत्।
तौ (भ्रातृ) वृद्धं (पितृ) प्राणमताम्।
(भ्रातृ) सुग्रीवाय वाली अद्रुह्यत्।
(मातृ) लालितः शिशुः सुखं स्वपिति।
अहं (होतृ) विप्राय दक्षिणां यच्छामि।

अभ्यासः एकादशः – பயிற்சி 11

तमिलि अनुवद।

தமிழில் மொழி பெயர்க்கவும்

राजा होत्रे दक्षिणां यच्छति।
शास्तारः जनान् धर्म्ये मार्गे नियच्छन्ति।
जामातरं श्वशुरः प्रियेण उपहारेण अभिनन्दयति।
भ्रात्रा सह लक्ष्मणः वनं अगच्छत्।
धाता ब्रह्मा यथापूर्वं इमं लोकं असृजत्।
मात्रे यशोदायै कृष्णः मोदं अवर्धयत्।
दुहितरं राधां वृषभानुः अन्वनयत्।
दातुः धनिकात् महत् धनं याचकः प्रतीक्षते।
भ्राता भ्रात्रा सह न विवदति।
याता ननान्दा स्वसा इति मे बह्व्यः उपकर्त्र्यः।

अभ्यासः द्वादशः – பயிற்சி 12

अधो निर्दिष्टेषु विशेषणेषु विशेष्येषु च एकत्र अनिर्दिष्टे विभक्तिवचने। युक्ताभ्यां विभक्तिवचनाभ्यां संयोजयत। तमिलि अनुवदत

கீழே தரப்பட்டுள்ள விசேஷணங்களிலும் விசேஷ்யங்களிலும் ஓரிடத்தில் விபக்தியும் வசனங்களும் தரப்படவில்லை. பொருத்தமான விபக்தி வசனங்களுடன் சேர்த்து எழுதவும். தமிழில் பொருளும் தரவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

मधुरान् शब्द –।	हिंस्र – मृगाणाम्।
काण – नारी।	परुष – वचनेन।
मूकाय बाल –।	कठिने शयन –।
सुरभीणि पुष्प –।	वृद्धाय गुरु –।
धनिक – नरेभ्यः।	चतुर – भाषणेन।
निपुण – पण्डितेषु।	सिंकतिला – भूमौ।
पूति – प्रदेशः।	रिक्तायां पेटी –।
पूर्ण – हृदयम्।	मूल्याय अल्प –।
अधिक – वेगस्य।	विरलं देश –।
मृदु – शयने।	शान्त – आश्रमपदम्।

अभ्यासः त्रयोदशः – பயிற்சி - 13

अधः केचन विशेषण विशेष्य प्रयोगाः दत्ताः। तेषु ये समाने लिङ्गे समानायां विभक्तौ समाने वचने वा न सन्ति तान् परिशोध्य साधून् प्रयोगान् लिखत। अनुवदत।

கீழே சில விசேஷண விசேஷ்யங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் பொருந்தாத லிங்க-விபக்தி - வசனங்களில் உள்ளவற்றைத் திருத்தி எழுதுக. பொருள் தருக.

निपुणाभ्यां बालेभ्यः। चतुरया रामेण। उष्णेन जलेन। शीतलेन वायवे। अन्धः नारी। अल्पं मूल्यम्। दीनेन बालेन। वृद्धेभ्यः नारीभ्यः। दरिद्राय माणवकाभ्यां। उन्नते पर्वतेषु। उत्तमे कुले। आढ्ये तस्मात्। कृशैः बालाभिः। मृदुला भूमिः। मधुरं जलं। अधिकेन हिमैः। रिक्तां पेटीम्। स्थूलेन दण्डाभ्याम्। विरलेषु धनिके। मधुरं इक्षुरसः। नीलं आकाशः। रक्तः सूर्यः। हरितं तृणानि। शान्तं गृहम्। दयालुः हरिः।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விடைகள்:

अभ्यासः प्रथमः

முன் தந்துள்ள அப்பியாஸங்களின் விடைகளை வரிசையாகத் தருவோம். நீங்கள் எழுதிய விடைகளுடன் சரிபார்க்கவும்

कन्दुकाय, तनयायै (पुत्र्यै), तुभ्यं, गौः (धेनुः) तृणाय, विद्यालयात् (पाठशालायाः), कावेर्यां नद्यां, अलम्, भवन्तं (त्वां) नमामि, इक्षुखण्डान्, दश अंगुल्यः।

अभ्यासः द्वितीयः

रोचते, आगच्छामि, करोति, वर्धते (जायते), बिभेमि, पिबति, स्नाति, भवति, पश्यति।

अभ्यासः तृतीयः

बोधयति, नमामि, विहरसि, गायति, भवति, स्पृहयसि कुप्यामि, रोचते, जुगुप्सते, चरन्ति।

अभ्यासः चतुर्थः

1. गजः वने चरति। बाला गृहात् पाठशालां आगच्छति। त्वं पुस्तकं आनयसि। अहं कूपात् जलं आहरामि। सः सत्यं वदति। रामः गिरेः अवतरति। रामः मया सह भाषते। त्वं पायसं लिहसि। सः लेखनाय प्रभवति। (गिरेः नदी प्रभवति) अहं गुरुं नमामि।

2. ஆசிரியர், குருவிடத்தில், கடிதத்திலிருந்து, எப்போதாவது (ஒருசமயம்), தாகம் உள்ளவனுக்கு, ஸகோதரி, தந்தையால் (தந்தையுடன்), பேனாவால், குதிரைகளின்பொருட்டு (குதிரைகளிடமிருந்து), அனேகமாக.

3. उद्यानं, जंबूफलं, महोन्दुः, कर्णाभ्यां, न रोचते, मयूरः, अस्मभ्यं, कुप्यसि, तव (ते, तुभ्यं) तस्मिन्।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

तुभ्यं-ते	युवाभ्यां-वां	युष्मभ्यं - वः
गौर्याः	गौरीभ्यां	गौरीभ्यः
रमया	रमाभ्यां	रमाभिः
वारिणे	वारिभ्यां	वारिभ्यः
उदकस्य	उदकयोः	उदकानां
आकाशे	आकाशयोः	आकाशेषु
प्रजायै	प्रजाभ्यां	प्रजाभ्यः
धनं	धने	धनानि
मृत्तिकया	मृत्तिकाभ्यां	मृत्तिकाभिः
विद्यायाः	विद्याभ्यां	विद्याभ्यः

अभ्यासः षष्ठः

सूर्यं, शत्रुं (शत्रून्), मह्यं (अस्मभ्यं), शष्कुलीं, मूषकं, गिरिं, वामेन, दुष्टं, रामं, दण्डेन।

अभ्यासः सप्तमः

कोपः कामात् जायते। अहं प्रासादात् वीथीं पश्यामि। परेषां पीडनं पापाय भवति। अहं मातरं पितरं च नमामि। माणवकेभ्यः वितरणाय फलानि क्रीणामि। तव पुरतः (पुरस्तात्) तत् पुस्तकं विद्यते। त्वं कस्य हेतोः (किमर्थं) एवं शोचसि? वेगेन मा धाव। देशस्य अर्थे महात्मा गान्धी सर्वमपि अत्यजत्। मनुष्येषु भारती उत्तमः।

अभ्यासः अष्टमः

ஐயா ! நல்வரவாகுக. தாங்கள் உட்காருங்கள். நான் சமைப்பதில் தேர்ந்தவளாக இருக்கிறேன். குரங்கு வேகத்துடன் ஓடுகிறது. முயற்சியால் எல்லா பொருள்களும் கிட்டுகின்றன. மான்கள் மான்களுடன் செல்கின்றன, அப்படியே மனிதர்கள் மனிதர்களுடன் செல்கின்றனர். பசுவின் பால் இனியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அதனால் குழந்தாய் ! சீக்கிரமாகக் குடி. ஆசிரியரே ! நாங்கள் நால்வர் கணிதம் படிக்கிறோம், நீங்கள் நன்கு போதிப்பீர்களாக. தர்மத்தின் பொருட்டு ராமன் காட்டிற்குச் சென்றான், ஸீதையும் அவரைப் பின்தொடர்ந்தாள். தபால் அனுப்பும் பணியகத்தின் எதிரில் உன் வீடு உள்ளது.

மனிதனால், எங்கள்பொருட்டு, பசியால், அதிகப்பரிசயம், வங்கி (பணவைப்பிடம்), உணவுப்பண்டம், மேல், காப்பகம், கப்பல், கலங்கிய, பொருந்துகிறான் (கூடுகிறான்), நோயின்மை (க்ஷேமம்), ஸந்திவேளையில், கறக்கப்படுகின்றவைகளில், நெருங்கியுள்ள, அதிக விலையுள்ளது, ஈடுபட்டவள், அதிகப்போக்கிரி, மூளை, அதிக இனிப்புள்ளது.

विकसति सति, अपकारिभिः कन्दुकक्रीडायां, वन्याः मृगाः, (श्वापदाः) क्रीडावीरः, प्रशंसा (पुरस्कारः), तव पुरतः सेवकः (भृत्यः, कर्मकरः), प्रासादः, कुप्यति, क्रीणाति, माषः, प्रजाः, दानं, यतिः, कितवः, स्वर्णकारः, आपणिकः, तन्तुवायः, जिह्वा।

अभ्यासः नवमः

त्वं पितरं नम।

रामः मातृभिः त्रिभिः आशिषा योजितः।

कृष्णः स्वस्रे सुभद्रायै आभरणं अयच्छत्।

जनकः दुहित्रा सीतया सह सभां आगच्छत्।

जनः उत्तमं नेतारं अनुसरति।

दीनः मनस्विनं दातारं याचते।

याचितारः दत्तेन अल्पेन न तुष्यन्ति।

उपदेष्टा शिष्याय हितं उपदिशति।

विद्यादात्रे भवते नमः।

भर्तुः प्रियं प्रिया पत्नी कांक्षते।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

अभ्यासः दशमः

पितुः दातारं, मातरं, स्वसारं, शास्तारः, भ्रातरं, भ्रातरौ पितरं, भ्रात्रे, मात्रा, होत्रे

अभ्यासः एकादशः

அரசன் ஹோமம் செய்பவருக்கு தக்ஷிணையைத் தருகிறார்.
ஆள்பவர்கள் மக்களை அறத்திற்பட்ட வழியில் அடக்குகிறார்கள்.
மாப்பிள்ளையை மாமனார் பிரியமான ஸம்மானப் பொருளால் மகிழ்ச்சியடைச் செய்கிறார்.
சகோதரருடன் லக்ஷ்மணன் காட்டிற்குச் சென்றான்.
உலகைப்படைக்கும் பிரும்மா முன்போல் இந்த உலகைப்படைத்தார்.
தாயான யசோதைக்குக் கண்ணன் சந்தோஷத்தை வளர்த்தான்.
பெண்ணான ராதையை விருஷபானு தன்வழிப்படச் செய்தார்.
கொடுப்பவரான செல்வந்தரிடமிருந்து பொரும்பெருளை யாசகன் எதிர்பார்க்கிறான்.
சகோதரன் சகோதரனுடன் விவாதிப்பதில்லை
ஓர்படி, நாத்தனார், ஸகோதரி என்று எனக்குப்பல உதவியாளர்கள்.

अभ्यासः द्वादशः

शब्दान्, काणा, बालाय, पुष्पाणि, धनिकेभ्यः, निपुणेषु, पूतिः, पूर्णं, अधिकस्य, मृदुनि, हिंस्राणां, परुषेण, शयने, गुरवे, चतुरेण, सिकतिलायां, पेट्यां, अल्पाय, देशं, शान्तम्.

अभ्यासः त्रयोदशः

निपुणाभ्यां बालाभ्यां (निपुणेभ्यः बालेभ्यः) चतुरेण रामेण, उष्णेन जलेन, शीतलेन वायुना (शीतलाय वायवे) अन्धा नारी, अल्पं मूल्यम्

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

दीनेन बालेन, वृद्धाभ्यः नारीभ्यः, दरिद्राभ्यां माणवकाभ्यां, (दरिद्राय माणवकाय) उन्नते पर्वते, (उन्नतेषु पर्वतेषु), उत्तमे कुले, आढ्ये तस्मिन्, (आढ्यात् तस्मात्) कृशाभिः बालाभिः, मृदुला भूमिः, मधुरं जलं, अधिकेन हिमेन, (अधिकैः हिमैः) रिक्तां पेटीम्, स्थूलेन दण्डेन (स्थूलाभ्यां दण्डाभ्यां) विरलेषु धनिकेषु, (विरले धनिके) मधुरः इक्षुरसः, नीलः आकाशः, रक्तः सूर्यः, हरितं तृणं, (हरितानि तृणानि), शान्तं गृहं, दयालुः हरिः।

ஸம்ஸ்கிருதஸ்ரீ பாடமாலா பாகம் - 2

மாதிரி வினாத்தாள்

1. ஸம்ஸ்கிருத பதங்கள் தருக.

கொடுப்பவன், குடிப்பவன், மாப்பிள்ளை, மகன், பேரன், அளித்தான், மகிழ்ந்தார், எடுத்துக்கொள்கிறேன். ஒரு கண் குருடானவன், நீர்பெருக்கு, நிறுத்திவைக்கிறார், மௌனமாக, வெகுநாட்களாக, பேசாதே, வழிபட, நீராட, பார்க்க, கக்கிவிட்டு, அதட்டிவிட்டு, வெடி.

2. ஸம்ஸ்கிருதத்திலுள்ள விசேஷ்யச் சொற்களுக்கேற்பத் தமிழில் தந்துள்ள விசேஷணச் சொற்களை ஸம்ஸ்கிருதத்தில் எழுதவும்.

உயர்ந்த पर्वते, இனிய औषधैः, குளிர்ந்த जलं, ஆழ்ந்த समुद्रे, பெருத்த फलात् மெதுவான शयनात्, கடினமான शिला புகழ்பெற்ற नृपाय, தரித்திரனான याचकाय, அழகிய पुष्पाणि

3. கீழ்க்கண்ட தாதுக்களுக்கு லட்டிலும் லோட்டிலும் மத்யம புருஷனில் ரூபங்கள் தருக.

खादति, जयति, चरति, आगच्छति, वसति

4. ஸம்ஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கவும்.

பாரத தேசத்தில் ஜனநாயக அரசு நடக்கிறது. தகப்பன் மகனைக் கொஞ்சுகிறார். வித்யைக்கு ஈடான கண் இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மரங்களுக்குக் காற்றிலிருந்து பயம். பிழைப்பு இல்லாத நாட்டில் வசிக்க மாட்டேன். பள்ளிக்கூடத்தில் ஓய்வு நேரம் எப்போது? மாலை நேரத்தில் சிறிதுநேரம் தேகப்பயிற்சி செய்கிறேன். என் அண்ணு காசிக்குச் செல்லப்போகிறுர். இன்று ஸங்கீத ஸபையில் ராமன் பாடப்போகிறுர். என் வகுப்பில் 5-6 மாணவர்கள் பரிசு பெறுகிறுர்கள். கடலைவிட வானம் பெரிது. ராமன் கண்ணனைக் கன்னத்தில் அடிக்கிறுன். தூய்மையற்ற நீரைத் தள்ளிவிடு. ராமு தொழிற்சாலையை நன்கு நடத்துகிறுன். வெண்ணெய்ப் பாத்திரத்தில் கண்ணன் கையை வைக்கிறுன்.

5. கீழ்தந்துள்ள தாதுச்சொற்களை அமைத்து வாக்யங்கள் எழுதுக.

अपश्यं, खेलामः, पठेयुः, व्यायच्छामि, अनुभवति

6. கீழ்கண்டவற்றில் விசேஷ்யச் சொல்லின் லிங்கத்திற்கேற்ப எண்களுக்குப் பதிலாக எண்களின் சப்த ரூபங்களைத் தருக.

दशरथस्य 4 पुत्राः। पाण्डवाः 5 भ्रातरः। गुहस्य 6 मुखानि। 4 बालेभ्यः फलं यच्छति। 9 ग्रहेभ्यः नमः कुर्मः। अहं 2 कराभ्यां फलं नयामि। विष्णुः 4 भुजैः 4 आयुधानि धरति। मह्यं 6 रूप्यकाणि यच्छ। रामस्य 3 भ्रातरः। रथः 4 अश्वैः चलति।

7. தனித்தனியே உள்ள இருவாக்கியங்களை त्वा விகுதி சேர்த்து இணைக்கவும்.

रामः बालं पश्यति, फलानि तस्मै यच्छति।
कमला जलं नयति, वृक्षान् सिञ्चति।
माता कन्दुकं ददाति, बालं क्रीडायै चोदयति।
गुरुः पुस्तकं ददाति, रामं बोधयति।
दरिद्रः वीथ्यां अटति, भिक्षां याचते।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

8. கீழ்க்கண்ட தாதுக்கள் அவற்றின் எதிரே கொடுக்கப் பட்டுள்ளது உபஸர்க்கங்களுடன் இணையும்போதம் ஏற்படும் பொருள் மாறுதலைக் குறிப்பிடுக.

१. चरति — वि, परि, सं
२. भवति — प्र, अनु, सं
३. हरति — प्र, वि, परि, व्या
४. तिष्ठति — अनु
५. गच्छति — आ, सं, निर्

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸம்ஸ்க்ருதஸ்ரீ பாடமாலா

மொழிப் பயிற்சி மிக எளிதானது. கருத்துடன் ஊன்றிப் பயிலத் தொடங்கினால் ஓராண்டிற்குள் மொழி வசப்படத் தொடங்கும். பிறகு மொழியிலுள்ள சிறிதும் பெரிதுமான நூல்களை படித்துப் பழகப் பழக மொழி நன்கு வசப்பட்டுவிடகிறது. மொழியின் இலக்கணமும் கற்பதற்கு எளிதே. தொடர்ந்து கருத்துடன் ஊன்றி ஈடுபடுவதே இதற்கான ஒரே உபாயம். நாம் நன்கு அறிந்த மொழி ஒன்றின் உதவி கொண்டு வேற்றுமொழி கற்பதும் மிக எளிது. அந்தந்த மொழியின் தனிச் சிறப்பும் பழகப் பழகத்தானே புரியும். இதைக் கருத்தில் கொண்டே தமிழின் மூலம் ஸம்ருக்ருதத்தைக் கற்பதற்கு உதவுவது என்ற நோக்குடன் 1977ல் காஞ்சீகாமகோடி பீடாதிபர் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் நல்லாசியுடன் ஸம்ஸ்க்ருதஸ்ரீ துவங்கப் பெற்றது.

பத்திரிகை மூலம் போதித்துத் தபால் மூலம் பயிற்சியில் உதவுவதானது. நேர்முகமாக வகுப்பறைகளில் போதிப்பது போல், எளிதாக அமைய வேண்டுமென்ற கருத்துடன் முயன்றதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளோம். தொடர்ந்து இப்பத்திரிகையின் வாசகர் வட்டம் பெருகிவருகிறது.

ஸம்ஸ்க்ருதஸ்ரீ பத்தரிகையில் பாடங்களுடன் எளிய சிறிய சிறந்த கட்டுரைகள், ஸம்பாஷணைகள், சிறு நாடகங்கள், மற்றும் செய்யுள்கள், ஸ்தோத்திரங்கள் இவைகளும் இடம் பெற்று வருகின்றன. அவை வாசகர்களுக்கு இலக்கியங்களில் ஈடுபாட்டை வளர்க்க உதவுகின்றன.

ஸம்ஸ்க்ருத எழுத்துப் பயிற்சி முதல் உயர்ந்த காவியப் பகுதிகள் வரை எளிய முறையில் பாடங்கள் வரிசையாக அமைக்க பெற்று ஸம்ஸ்க்ருதஸ்ரீயில் வெளிவந்தன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் அமைந்த பயிற்சிகளை வாசகர்கள் எழுதி எங்களுக்கு அனுப்பித் திருத்தப் பெற்று திரும்பப் பெறுகிறார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கடந்த பல ஆண்டுகளில் இதன் மூலம் பயிற்சி பெற்றவர்கள் தாமே ஆங்காங்கு ஆரம்ப வகுப்புகளை தொடங்கி எமது சேவையில் பங்கு கொண்டுள்ளனர். அவர்களது ஈடுபாடு பெரிதும் போற்றத்தக்கது.

ஸம்ஸ்க்ருதஶ்ரீ பாடமாலா

ஸம்ஸ்க்ருதஶ்ரீ பத்திரிகையில் வெளியான பாடங்களை மட்டும் தனியே தொகுத்து ஸம்ஸ்க்ருதஶ்ரீ பாடமாலா என்ற 7 பாகங்கள் கொண்ட தொகுப்பு வெளியாகியுள்ளது. இவை அவ்வப்போது பெறும் அனுபவங்கள் மூலம் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. இவற்றின் துணைகொண்டு ஸம்ஸ்க்ருதத்தை எழுத்துப் பயிற்சியில் தொடங்கி காவியங்கள் வரை எளிதில் கற்கலாம். ஆங்கிலத்திலும் பாடமாலா-1–2 பாகங்கள் வெளியாகியுள்ளன.

ஸம்ஸ்க்ருதஶ்ரீ பாடமாலா என்ற தொகுப்பை பெறுபவர்கள் அவற்றில் வெளியாகியுள்ள பாடங்களைப் பயின்று பாடங்களின் இறுதியில் கொடுக்கப் பெற்றுள்ள பயிற்சிகளைத் தாமே எழுதி புக் போஸ்டு மூலம் Book-Post Posted under clause 114 (8) of P & T Guide... PUPILS Exercise என்று உரைமீது குறிப்பிட்டு (உரையின் வாயை ஒட்டாமல்) எமக்கு அனுப்பினால் திருத்தி அனுப்புகிறோம். சந்தேகங்களுக்கு விளக்கம் தருகிறோம். இந்தச் சேவையைப் பெற விரும்புபவர் தபால் செலவிற்கென தொகையினை மட்டும் விவரம் கேட்டு அனுப்பவும். மேலும் தாங்கள் விரும்பும் தொகையை நன்கொடையாக அளிக்கலாம்.

ஸம்ஸ்க்ருத எஜுகேஷன் ஸொஸைடி,
212/13-1, நெ. 11, ஸையிண்ட் மேரிஸ் ரோட்,
மந்தைவெளி, சென்னை-28, 2495 1402

Printed at : V.K.N. Enterprises, Chennai-4, 9840217036

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.